


# எரிமலை

சித்திரை-1993

P. RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சர்வதேசமே கண்களைத் திற

தமிழன் காலாற நடந்து, காற்றைக்கூட சுதந்திரமாக சுவாசிக்க முடியாதவாறு எறிகணைத் தாக்குதலாலும், விமானத் தாக்குதலாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் படு பயங்கரமான கொடிய யுத்தத்தை நிகழ்த்திவரும் சிறீலங்கா அரசு, ஆற்றாப் போக்கிரித்தனமாக இறுதி அஸ்திரமாக உணவை ஆயுதமாக்கிவிட்டிருக்கிறது. துளியளவேனும் மனிதநேயமற்ற இந்தச் செயல் சிறீலங்கா ஒரு கொடிய அரசு என்பதனை வியாபகமாக வெளிபடுத்தியிருக்கிறது.

புத்த தர்மம் போற்றிப் பேணப்படும் அழகான இலங்கைத் தீவென்றும், பஞ்சசீலக் கொள்கைகளின் வழித் தொடரும் அரசென்றும் பேசிவந்தது பொய்யே என நிரூபித்திருக்கிறது.

இந்த உணவுத் தடை, போசாக்கு இன்மையான ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளைத் தோற்றுவித்திருக்கிறது. பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலையில் மனித உயிர்கள்.

இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் எனது தேச மக்கள் என்று கூறிக்கொண்டு நிற்கும் சிறிலங்கா அரசு, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை அழித்துவிடவே கங்கணம் கட்டி நிற்கிறது.

மக்கள் வீதிக்கு வந்துவிட்டார்கள். துன்புற்று, அநாதையாய், கேட்பாரற்று அடிமைகளாய் வாழ்வதை வெறுத்த மக்கள் நியாயம் கேட்டு நிற்கிறார்கள்; நீதி கேட்டு நிற்கிறார்கள்.

'இந்த கொடிய அரசின் செயல்தனைக் கொளுத்துவோம்' என மக்கள் கிளர்ந்தெழுந்து நிற்கிறார்கள். பெரியவர்கள், போரில் ஈடுபட முடியாத முதியவர்கள், சிறியவர்கள் மற்றும் அனைத்து மக்களும் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

ஊமையாய் இருக்கும் சர்வதேசமும் உண்மையை உணர்ந்து பேசத்தொடங்கும்.

சர்வதேச சமூகத்தைப் பேசவைப்பதற்கு வெளியிலுள்ள நாம் முதலில் பேசத்தொடங்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

சித்திரை 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


## சர்வதேச சட்ட வரையறையினுள் தமிழீழம்

ஒரு மக்கள், கூர்ப்படைந்த அகப்புறக் காரணிகளால், தமிழ்த் தேசிய விடுதலை குறித்து போராடும்போது, அது நியாயமான போராட்டமாக இருந்த போதிலும், அதனை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க மறுக்கிறது. காரணம், அதனை அங்கீகரிக்க வசதியாக சர்வதேசச் சட்டங்களில் மாறுதல்கள் கொண்டுவரப்படவில்லை. மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய, குடியேற்றவாத மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான சட்டங்களே தொடர்ந்து நிலவுகின்றன. தற்போது உள்ள அரசுகளுக்குள் உள்ள ஒரு மக்கள், புதியதொரு அரசை உருவாக்கும் உரிமை பற்றிய வரைவிலக்கணங்களை, கொள்கைகளைச், சட்டங்களை வரையறுக்க சர்வதேசச் சமூகம் மறுக்கின்றது. எனவே, சுயநிர்ணய உரிமைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக வடிவம் பெற்று, நீண்டகாலப் போராக இழுபடும் நிலையே காணப்படுகின்றது. சட்டமில்லாத காரணத்தைக் காட்டி, போராட்டத்துக்கு சட்ட அந்தஸ்தும், அங்கீகாரமும் வழங்காது விடுதலோடு சர்வதேசச் சமூகம் நிற்கவில்லை. குடியேற்றவாதத்துக்கு எதிரான சுயநிர்ணய உரிமை குறித்த சட்டங்களில், சில ஒட்டுவேலைகளைச் செய்து, புது வியாக்கியானங்கள் கொடுத்து, ஒரு மக்களின் சுயநிர்ணய போராட்டத்தை நசுக்கவே முற்படுகின்றது. ஒரு கொடிய சர்வாதிகார அரசாகவோ, இனப்படுகொலை அரசாகவோ, இனவாத அரசாகவோ இருந்த போதிலும் அதனைத் தட்டித் திருத்திப் பாதுகாக்கவே விரும்புகிறது. இதற்கு மறுதலையாக, நீண்டகாலமாக, இனப்படுகொலைகளுக்கும், இனவாத ஒடுக்குமுறைகளுக்கும், சொல்லொணாத் துன்பங்களுக்கும் உட்பட்டிருக்கும் மக்களின் நியாயமான போராட்டத்தை மறுதலிக்கிறது. ஸ்தாபிக்கப்பட்ட அரசுக்கெதிரான சட்ட ரீதியற்ற போராட்டமென வரையறுக்க முற்படுகின்றது. போராட்டமே பிழையென்கிறது. கொடிய அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டமென்றால், அதனைப் பயங்கரவாதமென வர்ணிக்க முற்படுகின்றது. எனவேதான் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது இன ரீதியில் ஒடுக்குமுறை எதனையும் செய்யவில்லை என்றும், கொழும்பு, அகதிகளுக்கு பாதுகாப்பான இடம் என்பதுமான பசப்புவாதங்கள் வைக்கப்படுகின்றன. இந்த வகைப்படுத்தலின் அடிப்படையில், கொடிய பயங்கரவாத அரசு, தட்டித் திருத்தப்பட்டுப் பாதுகாக்கப்படவும், நீதியான போராட்ட இயக்கமும், மக்களும், இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்டு அழிக்கப்படவுமான நிலை ஏற்படுகின்றது. எனவே, சர்வதேசச் சட்டப் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், அங்கீகாரம் இல்லாத காரணத்தினால் விடுதலை அமைப்புக்கள் எதிர்நீச்சல் போடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. அங்கீகாரத்துடனான ஆதரவு கிடைக்காதது மாத்திரமல்ல, சட்டரீதியற்ற போராட்டமென்று வர்ணிக்கப் படுவதன் காரணத்தினால், அதனது அனைத்து நடவடிக்கைகளும் சட்ட மீறல் என்றும், குற்றவியல் நடவடிக்கைகள் என்றும் வர்ணிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது. இதனால், மனித உரிமை மீறல்கள் என்ற பெரும் பழி அவ் அமைப்புக்கள் மீது சுமத்தப்படுகின்றது. இது போராட்ட வெற்றிப் பாதையில் பெரும் தடையாக அமைகிறது. இத்தடைகளை வென்று, இராணுவ ரீதியில் வெற்றி பெற்று, சுதந்திரத்தை நிலைநாட்டும் போதுதான் உலக சமூகம் அங்கீகரிக்கும் என்பது உண்மையாகின்றது. எனவே, தளத்தில் எமது தாயகத்தில் மக்களின் ஒன்றுதிரண்ட சக்தியுடன், எமது விடுதலையை நாம் வென்றெடுத்தலும், போராட்டம் தோல்வியுறாது பாதுகாத்தலும் அவசியமாகின்றது. அதன்பிறகே அங்கீகாரம். அதுவரைக்கும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்காது என்பது மட்டுமல்ல, தற்போது உள்ள அரசு என்ற யதார்த்தத்தை பாதுகாக்கவும், போராட்டத்தை நசுக்கவும் முயற்சிக்கும். அதுவே மாற்றமுறாத சர்வதேச சட்டங்களுக்கு இசைவானது என்பது மிகவும் கசப்பான உண்மையாகும். சுதந்திரப் பாதையில் மிகப்பெரும் தடையாக, கடைசி அஸ்திரமாக பயன்படுத்தப்படுவது மனிதாபிமான உதவி என்று சொல்லப்படுகின்ற மக்களின் அத்தியாவசியத் தேவைகளைத் தடுத்தலாகும். அது பொருளாதாரத் தடை என்ற ரீதியில், இராணுவ நோக்கிற்காக எதிரி பயன்படுத்தும் கடைசி அஸ்திரமாக இருக்கும். அதுவே தமிழீழத்தின் மீது தற்போது பிரயோகிக்கப்படுகின்றது. இதனை வென்றுவிட்டால் தடை எதுவும் இராது. பாதை நெடுக திறந்திருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்னை பூபதி



# மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம்

அன்னை பூபதியை நினைவுகூரும் முகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது

அன்னை பூபதி அவர்கள் இந்த மண்ணின் விடுதலைக்காகத் தன்னைத் தற்கொடை செய்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்னையின் கோரிக்கையைச் செவிசாய்க்க மறுத்து எள்ளி நகையாடிய அன்னியர்கள் இந்த மண்ணில் இருந்து வெளியேறி மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

சிங்கள இனவாதிகளின் பிடியிலிருந்து இந்த மண்ணை மீட்டெடுக்க விடுதலைப்புலிகள் மூன்றாம் கட்டப்போரில் ஈடுபட்டு இருவருடமும் ஒன்பது மாதங்களும் கடந்துவிட்டன.

ஆக்கிரமிப்பின் அகோரம் தென்தமிழீழத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.


அன்று அன்னை பூபதியின் வடிவில் மக்களின் எழுச்சி ஆக்கிரமிப்புக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, மக்கள் சக்தி புலிகளுக்குண்டு என்பதை தெளிவுபடுத்தியது.

ராஜீவ் அரசின் உண்மையான நிலைப்பாட்டை தமிழர்களும், உலகமும் புரிந்துகொள்வதற்கு பூபதி அம்மாவின் புனிதப் போர் காரணமாக அமைந்தது.

ராஜீவின் வல்லாதிக்கப் படையினர் தமிழீழத்தை ஆக்கிரமித்த போது தென்தமிழீழ மக்களின் எழுச்சியைக் கண்டு நிலைகுலைந்த சிங்கள ஆக்கிரமிப்பு வாதிகள் இன்று தென்தமிழீழத்தில் மக்கள் எழுச்சியைத் தடுக்க பயங்கரவாத வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் 51 தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டு அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்.

கிராமங்களில் தமிழர்கள் பண்பாட்டு மையமாக விளங்கிய இந்துக் கோவில்கள் உடைத்துத் தகர்க்கப்பட்டன. தொழில் நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களை பயன்படுத்த முடியாத அளவிற்கு தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதுவரை



அன்னைக்கு ஆதரவு ஊர்வலம் நடத்தும் பெண்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிடைத்த தகவலின்படி 1990 ஆனி மாதத்திற்குப் பிறகு இம்மாவட்டங்களில் 6468 க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், காணாமலும் போயுள்ளனர். 2927க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர். எரிக்கப்பட்ட குடியிருப்புக்கள் எண்ணிலடங்காதவை. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

1983ஆம் ஆண்டிற்கு பின்பு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கூட்டாகத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நிறைய உண்டு. 1991ஆம் ஆண்டும் மகிழடித்தீவில் 123 தமிழர்கள் கூட்டாகக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாகத் தமிழ் மக்களின் பண்பாடு, பொருளாதாரம் எனபவற்றையும், தமிழ் மக்களையும் திட்டமிட்டு அழித்து தமிழரின் தாயகப் பிரதேசங்களின் மீது சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திவருகின்றனர்.

தமிழீழத் தாயகத்தில் தென் தமிழீழப் பிரதேசம் பெரும்பாலும் சிங்கள ஆக்கிரமிப்பின் அகோரத்தில் அழிந்து கொண்டிருக்கின்றது.

அடக்கப்படும் மக்கள் மத்தியில்தான் எழுச்சியும், புரட்சியும் தோன்றும். இந்த அடிப்படையில்தான் அச்சுறுத்தலுக்கும், கொலைப் பயமுறுத்தலுக்கும் மத்தியில் துணிந்து துவளாது போர்தொடுத்த அன்னை பூபதியின் தற்கொடையை தமிழ் மக்களாகிய நாம் என்றும் மறக்க முடியாது.

அன்றும் விடுதலைப்புலிகளை மக்கள் நேசித்தார்கள். இன்றும் நேசிக்கிறார்கள்.

இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையில் விரட்டப்பட்டு அகதிகளாக வாழ்கின்ற மக்கள் தங்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற விடுதலைப் புலிகளை எந்த அளவிற்கு நேசிக்கிறார்கள் என்பதை தென் தமிழீழ மக்கள் மத்தியில் இன்றும் காணமுடிகிறது. புலிகளை அரவணைத்து தங்களின் உணவுகளைப் பரிமாறி அன்புடன் அவர்களை வழியனுப்பி வைத்து பூரிப்படைகின்ற மக்களைப் பார்த்து மனம் மகிழ்ந்து நிற்கின்றோம். அன்னை பூபதியின் எழுச்சியினால் உந்தப்பட்ட மக்கள் அகிம்சைப் போராட்டம் எமது உரிமையை சிங்கள அரசிடமிருந்து பெற்றுத் தராது, ஆயுதப் போராட்டம் மூலமே இது சாத்தியமாகும் என்பதை உணர்ந்து விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

அன்று அகிம்சைப்போர் தொடுத்த அன்னையை இழந்து நின்றோம். அன்னை பூபதி அவர்களின் நினைவாக மக்கள் தங்கள் எழுச்சியைக் காட்டினார்கள். ஆனால், ஆக்கிரமிப்புவாதிகள் உணரத் தவறினார்கள். இதனால் அன்னையின் மகனைக் கூட கண்ணதாசன் என்னும் பெயரில் புலிகளின் ஆயுதத்துடன் காண்கின்றோம்.



உயிர் பிரியும் இறுதிக் கட்டத்தில்

1990ஆம் ஆண்டு அன்னை பூபதி அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தின் போது மக்களின் எழுச்சியை மட்டக்களப்பில் சிங்கள ஆக்கிரமிப்புவாதிகள் கண்கூடாகக் கண்டார்கள். எழுச்சிப் பேரணியில் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் கலந்துகொண்டு அன்னை பூபதியின் தற்கொடையை கௌரவித்தும், விடுதலைப்புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவை வெளிக்காட்டியும் நின்றனர்.

சிங்கள இனவாதிகள் ஏக்கமடைந்தனர். மக்களின் உண்மை நிலையை புரிந்தனர். மட்டக்களப்பின் வரலாற்றில் இவ்வாறான பேரணியை இதுவரை கண்டதில்லை என்பதை உணர்ந்தனர். இதனாலேதான் 1990 ஆனி 11ல் சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழீழ விடுதலைப்புலிகளின் போர் தொடங்கிய போது எண்ணிக்கையற்ற மக்களைக் கொன்று குவித்தனர்.

ஈழத்தமிழரின் 'பாரம்பரிய பிரதேசம்' எனப்படும் தமிழீழத் தாயகம் ஈழத் தமிழ் மக்களின் மரபுவழிச் சொத்தாகும். சிறீலங்கா அரசு எமது தாயகத்தை வடக்கு, கிழக்கு எனப் பிரித்துக்காட்டிய போதும் எமது தாயகம் புவியமைப்பாலும், மக்கள் தொடர்பாலும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிப் பண்பாட்டுத் தொடர்பாலும், வரலாற்றுச் சான்றுகளாலும், இப்பகுதியானது "ஒரே நாடு" என்றுணரத்தக்க பொதுப்பண்புகளைக் கொண்டு விளங்குவதோடன்றி 'தனிநாடு' என்ற அரசியல் பண்பும் பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகள் பேணப்படவும், எங்கள் 'தாயகம்' சிறீலங்கா அரசின் மேலாண்மையிலிருந்து தளை நீக்கம் பெறவும், தாயகத்தின் இறைமையைப் பேணவும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற ஒரே குறிக்கோளுடன் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மை தற்கொடை செய்துள்ள மாவீரர்களையும், இக்குறிக்கோளை நோக்கிய வழியில் செல்லும் புலிவீரர்களையும் நாம் போற்றுகின்றோம். நமது தாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தில் இதுவரை நம் ஒவ்வொரு வரினதும் பங்களிப்பு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



மலர் படுக்கையில் துயிலும் அன்னை.

இந்நிலையில், சிறீலங்கா அரசும் பேரினவாதக் கல்விமான்களும், பௌத்த பீடங்களும் எமது தாயகம் 'ஈழம்' என்பதை ஏற்க மறுக்கின்றன. இத்தகைய பேரினவாதக் கும்பல்கள் எமது தாயக எல்லைக்குள் சிறீலங்கா அரசு ஆதரவுடன் திட்டமிட்ட ரீதியில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளப் பக்கபலமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவிற்கும் மேலாக கோடாரிக்காம்புகள் போன்று தன்னின அழிவிற்கே துணை போகின்ற சில தமிழ்க் குழுக்க

## விடுதலை நெருப்பே!

"கஸ்தூரி"

வரலாற்றுப் பெரும் போரான ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த கப்டன் கஸ்தூரி அவர்களால் அன்னை பூபதி நினைவுநாளில் எழுதப்பட்ட கவிதை.

**திக்குகள் அதிர**
**தீயவர் ஒழிய**
**பசியோடு வயிறது**
**பற்றியெரிய**

**விசுவருவ மெடுத்த**
**விடுதலை நெருப்பே,**

**உந்தன்**
**அடிமுடி அறிந்து**
**அழிக்க முடியாமல்**
**பிரளயங்கள் அன்று**
**பின்வாங்கிச் சென்றன**

**வெம்மையின் முன்னால்**
**வெற்றி கொள்ள முடியாமல்**
**வெறியர் படை**
**மிரண்டோடியது.**

**தேசத்தின் தாகமறிந்து**
**தீர்த்து வைத்த தியாகியே,**
**விடுதலைக்கு**
**மூச்சுக் கொடுத்தவளே**

**காற்றுக்குள் உன்னை**
**காண்கிறது காலம்**
**தண்ணீருக்குள் உன்னை**
**தழுவுகிறது தமிழ்**
**உணவுக்குள் உன்னை**
**உணர்கிறது உரிமை.**

**அந்தோ.....!**
**அண்டங்களின் ஐம்புலன்களின்**
**அறிவுக்கப்பாலும்**
**நீண்டு நீண்டு செல்லும்**
**நினைவானாள் பூபதி.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளின் அட்டூழியங்களோ சோகம் நிறைந்த கோரச் செயல்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் காட்டிக் கொடுக்கிறார்கள்: தமிழினத்தின் இறைமையின் கல்லறையில் உல்லாச வாழ்க்கை அனுபவிக்கிறார்கள். சிறீலங்கா அரசின் கூலிப் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அழிவுக்கு பக்கத்துணையாக செயற்பட்டு வருகின்றார்கள். தாயக எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை அகதிகளாக விரட்டியடிக்கிறார்கள்.

அரச கூலிப்படையினதும், அடிப்படைகளுக்குச் சோரம் போகும் தமிழ்க் குழுக்களினதும், முஸ்லீம் காடையர்களினதும் இன அழிப்பு, பொருள் வள அழிப்பு, எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து மக்களைத் துரத்தியடித்தல் முதலான பயங்கரச் செயல்களுக்கு தினமும் பலியாகி வருபவர்கள் தென்தமிழீழ மக்களே எனலாம்.

எங்கள் வளங்களில் வாழ்ந்து, பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து, எங்களது போராட்டச் சூழலில் பயிற்சி பெற்று ஈற்றில் பேரினவாத சக்திகளுக்கு அடிமைப்பட்டுத் தமிழர்களுக்கெதிராக பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டு ஆயிரக்கணக்கான மக்களின் உயிரையும் பொருளாதார வளங்களையும் சூறையாடி வருகின்ற சில முஸ்லீம் காடையர்களினதும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் பெரிதும் தென்தமிழீழ மக்களே பலியாகி வருகின்றனர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலாக தென் தமிழீழத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் சிறீலங்கா அரசு செயற்படுத்தி வந்துள்ளது. டி.எஸ். சேனநாயக்கா தொடக்கி வைத்த கல்லோயாக் குடியேற்றத் திட்டங்களினால் தமிழ்ப் பாரம்பரியப் பகுதிகள் சிங்களவரின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மதுறு ஓயாத் திட்டத்தின் மூலம் சிங்களக் குடியேற்றம் முடுக்கிவிடப்பட்டது. இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமேற்கே சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆங்காங்கே அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும், தமிழர்களைப் பழிவாங்கும் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களுக்குத் துணையாக அமைந்தன.

தென்தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் இராணுவ அட்டூழியங்களாலும், முஸ்லீம் மதரீதியான ஜிகாத் இயக்கத்தின் அழிப்பு நடவடிக்கையாலும் அவலத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ள தென்தமிழீழ இளைஞர்கள் தமது தாயகத்தை, தாயகத்தின் வளத்தை, இப்பிரதேசங்களில் தன்மானத்துடன் வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறும் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மைப் பெரிதும் இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**“சுதந்திர தாய்நாட்டைப் பெற ஒவ்வொரு தாயும் போராடுகிறாள். மலரும் தமிழீழத்தில் நம் குழந்தைகள் இனிதாய் வாழப்போகின்றன.”**

- மரணத்துக்கு முன்னர் அன்னை பூபதியின் உரையிலிருந்து.

....அன்னை பூபதியின் போராட்ட சூழ்நிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழீழ மக்களின் அவலக்குரல் கேட்டு “தமிழ் இனத்தின் துயர் துடைப்போம்” என்ற போர்வையில் இந்திய அமைதி காக்கும் படை தமிழீழத்தில் கால் வைத்தது. விடுதலைப்புலிகளின் எழுச்சியையும், செயல் திறன்களையும் கண்டஞ்சிய இந்திய அரசு அவ்வியக்கத்தை அழிக்கத் திட்டமிட்டது. ஆயுதக் கையளிப்பு என்ற வகையில் புலிகளைப் பலமிழக்கச் செய்து, எமது இயக்கத்தை நலிவடையச் செய்யலாம் என இந்திய அரசு பகற்கனவு கண்டது. இப்பின்னணியில் சிறீலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்து தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிடும் நயவஞ்சகத் தன்மையை அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் இந்தியப் படையை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். இந்திய இராணுவத்தை வெளியேற்றும்படி தமிழ் மக்கள் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள். இந்திய அமைதிப்படை புலிகளை வேட்டையாடித் தீர்த்துக் கட்டலாம் எனப் போர்க்கொடி உயர்த்திப் புலிகளைத் தேடித் தேடி வதம் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில் காந்திய வழிவந்த இந்திய அரசுடன் யுத்த நிறுத்தக் கோரிக்கையை முன்வைத்து, இந்திய அரசு புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி சாகும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்டு, தமிழீழத் தளை நீக்கத்திற்காக அகிம்சை வழியில் தன்னையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கொடை செய்த தமிழீழத் தாய் அன்னை பூபதியாவார்.

அனைத்துலக அரசியலரங்கில் எமது நியாயமான உரிமைப் போராட்டத்தின் தேவையை அன்னை பூபதியின் வீரச்சாவு எடுத்துக் காட்டியது; காந்தி தேசத்தின் கபடத்தைப் பாரறியப் பறைசாற்றியது. எமது போராட்டம் வெறுமனே விடுதலைப் புலிகளின் போரல்ல. அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை எம்மை அடக்கியாள நினைக்கும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எடுத்தியம்பியது.

அன்னை பூபதியின் போராட்ட வரலாறு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் வீரத்தையும், மானத்தையும் உரிமையுடன் வாழும் உணர்வையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

* * *

*வரலாற்றுப் பெரும் போரான ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த கப்டன் வானதி அவர்களால், 26.11.1989 அன்று தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பிறந்தநாளுக்கு வாழ்த்துக் கூறி எழுதப்பட்ட கவிதை.*

# வேங்கைகளின் வேந்தன்

*"வானதி"*

தமிழினம்
தொலைத்துவிட்ட
சுதந்திரத்தைத் தேட,
தமிழினம் விற்றுவிட்ட
தன்மானத்தை மீண்டும்
மீட்க,
தலை நிமிர்ந்த
மனிதனை
தமிழினம் காண,
வீரத்தாயின்
பிரசவ வேதனையின் பின்னால்
ஓர் ஜனனம்!
அன்றைய குழந்தைதான்
இன்றைய
"வேங்கைகளின் வேந்தன்"

அன்றைய அந்த
குழந்தைச் சிரிப்பு
இன்னும்
இவனுடன்
கொஞ்சிக் குலாவும்
அந்த
குழந்தையுள்ளம்
இன்னும் இவனுடன்
சொந்தம் பேசும்
பிஞ்சுக் கால்களின்
பூப்போன்ற மென்மை
இன்னும்
இவன் இதயத்துள்
இமயமளவுயரத்தில்!

வீரம் அது
இவன்
காலடிச் சுவடுகளிலிருந்து
விழித்துக் கொள்ளும்.
இவனது
சுதந்திரச் சிறகுகள்
அகலமானவை!
மிக... மிக...அகலமானவை
அதனால்
இவனைச் சிறைவைக்க
முயன்றவர்கள்
தங்களையே
சிறைக்குள்
போட்டுக் கொண்டார்கள்!

இராமனின்
சந்தேகம் தீர
சீதையின் தீக்குளிப்பை
பாரதம் பாராட்டி
பத்தினியென்று
பூச்சூடுகிறது!
ஆனால் இங்கே
இவனோ
வாழ்வின்
ஒவ்வோர் அத்தியாயத்தை
புரட்டும் போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓராயிரம் தடவைகள்
தீக்குளிப்பு
செய்கிறானே !
யாருக்கிந்த
யதார்த்தம் தெரியப் போகிறது ?

இவன்
எல்லாவற்றையும்
தனக்குரியதாக்கி
எதையுமே
தனக்கென்று
சொல்லத் தெரியாதவன் !

அச்சத்துக்குக் கூட
இவனிடம் அச்சம்
அதனால், இவனை
அண்டியதே இல்லை !
பாரபட்சம் அது
இவனுடன்
பாசங் கொண்டதேயில்லை
வரலாற்றை
வழிகாட்டியாக
வரித்துக் கொண்டவன்
இன்று ஓர்
வரலாற்றுக்கே
வழிகாட்டியாகி விட்டான்.

இயற்கையை
நண்பனாக்கியவன்
இன்று
இயற்கைக்கே
நண்பனாகிவிட்டான்.
வாழ்க்கையை
தத்துவாசிரியனாக
ஏற்றவன் இன்று
தமிழீழத்தின்
வாழ்க்கைக்கே
தத்துவாசிரியனாகி விட்டான் !

இவன் கைகள்
மட்டுமே
ஆயுதம் ஏந்தும்
இவன் கண்களோ
கருணை வெள்ளத்துள்
நீந்தும்
அன்புக்கு
அர்த்தம் பார்ப்பதற்கு
அகராதியைத் தட்டுவதை விட
இவனது
ஒவ்வோர்
அணுகுமுறையிலும்
ஓராயிரம்
அர்த்தங்களை
படித்துக் கொள்ளலாம் !

பாரதத்து
பாரதியால்
பாட்டில் மட்டுமே
காட்ட முடிந்த
"புதுமைப் பெண்களை"
இவனோ
காட்டிலே உருவாக்கி
களத்திலே காட்டுகிறான்
சமூகத்தின்
பிற்போக்கு
சிந்தனைகள்
இவனது சீற்றத்தியினால்
வெந்து.... வெந்து
சாம்பலாகியபடியே.... !

எழுதி.... எழுதி....
எத்தனை
எழுதியும்....
இவனைப் பற்றி
சொல்ல முடிவது
சொற்பமே !
சொல்லக் கிடப்பதோ
மிச்சம் !!
உலகத்தின் கணிப்பில்
உன்னத ஸ்தானத்தை
தன்
உரிமையாக்கியவன்
உண்மையின் உறவுடன்
உருவாகிக் கொண்டிருக்கும்
தமிழனின்
தனிநாட்டில்
தமிழீழத்தில்
நாளை
தேசியக் கொடியில்
சேனை அசைந்திடும்
வேங்கையின் வேந்தனின்
"வீரம்" வென்றிடும் !!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீரம்-விவேகம்


இஸ்ரேலிய பாணியை சிங்களப் படைகள் அச்சொட்டாகக் கடைப்பிடித்த காலம் அது.

தமிழ் இளைஞர்கள்மீதான சித்திரவதை வடிவங்களானாலும் சரி, படுகொலை முறைகளானாலும் சரி, தாக்குதல் நடவடிக்கைகளானாலும் சரி, எல்லாமே இஸ்ரேலிய உளவு நிறுவனமான 'மொசாட்'டின் ஆலோசனையின் பேரிலேயே நடாத்தப்பட்டன.

சுதுமலைத் தாக்குதலையும் அத்தகைய இஸ்ரேலிய பாணியிலேயே சிங்களப் படைகள் நடாத்தின.

1985 ஆம் ஆண்டு, மார்கழி மாதம் 21 ஆம் திகதி காலை வேளை,

கிட்டண்ணை தங்கியிருந்த சுதுமலை முகாம்மீது, இராணுவத்தினர் ஒரு கொமாண்டோ அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.




மூன்று உலங்கு வானூர்திகளின் துணையுடன் வான்வழி வந்த இராணுவத்தினர், இந்த அதிரடியை நிகழ்த்தினர்.

சுதுமலை முகாமிலிருந்து சிறிது தூரத்தில், திடீரென இரண்டு உலங்கு வானூர்திகள் தரையிறங்கி இராணுவத்தினரை இறக்கி விட்டு மேலெழுந்தன. எல்லோரிடமும் நவீன ஆயுதங்கள் (ஏ.கே. ரக துப்பாக்கிகள், எல்.எம்.ஜி, ஆர்.பி.ஜி, மோட்டார்கள்.)

தரையிறக்கப்பட்ட ஓரிரு நிமிடங்களில், முகாமுக்கு மிக அருகில் சண்டை தொடங்கியது.

எமது போராளிகளிடம் சாதாரண துப்பாக்கிகள் (எஸ்.எம்.ஜி, றிப்பிற்றர், 303 போன்றன.)கிட்டண்ணையிடமிருந்து நம்பிக்கையூட்டக்கூடிய விதத்திலும், தெளிவாகவும், உறுதியாகவும் கட்டளைகள் பிறக்கின்றன.

கிட்டண்ணையின் தலைமையில் சண்டை தீவிரமாக நடக்கின்றது. 'வோக்கி ரோக்கி' மூலம் அருகிலிருந்த முகாம்களை அழைத்து,



அங்கிருந்தும் போராளிகளை வரவழைத்து, அவர்களைக்கொண்டு வேறு திசைகளிலிருந்தும் இராணுவத்தினரைத் தாக்குவிக்கின்றார்.

தன்னிடமிருந்த குறைந்த ஆயுத பலத்தைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றார். துணிவுடன் நின்று எதிரியை எதிர் கொள்கின்றார்.

சிங்கள இராணுவம் நடாத்திய அன்றைய கொமாண்டோத் தாக்குதல் வெற்றிபெறவில்லை. அத்தாக்குதல் முறியடிக்கப்பட்ட அதிர்ச்சியினால், குழப்பத்தினால், அச்சத்தினால் அதேபாணியிலான அதிரடிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதில் இராணுவம் அக்கறை காட்டவில்லை.

தற்செயலாக அந்த கொமாண்டோத் தாக்குதல் வெற்றி பெற்றிருந்தால், வெற்றிக்களிப்பில் மீண்டும் மீண்டும் சிங்களப் படை பல இடங்களில் எமது நிலைகள் மீது பல தாக்குதல்களை நடாத்தியிருக்கும்; எமக்குச் சேதங்களையும் ஏற்படுத்தியிருக்கும்.

ஆனால், அப்படிப் பெரிதாக நடைபெறவில்லை. இதற்குப் பிரதான காரணம், அன்றைய எமது சுதுமலை முறியடிப்பில் கிட்டண்ணை கொடுத்த வீரம் மிகுந்த, விவேகம் நிறைந்த, தலைமைப் பாத்திரமே ஆகும்.

* * *


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துணிவு-முயற்சி

**1984** ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு காலைப் பொழுது. கிட்டண்ணை மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு, யாழ் பருத்தித் துறை வீதிவழியாக அச்சுவேலி பஸ்நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். ஏதோ ஒரு வேலை காரணமாக வேறு இரு இளைஞர்களையும் ஏற்றிக்கொண்டு வந்திருந்தார். மோட்டார் சைக்கிளில் மொத்தம் மூவர்.




அந்தக் காலம் சிங்கள இராணுவம் குடாநாடெங்கும் தங்கு தடையின்றி உலவிய காலம்.

அச்சுவேலி பஸ்நிலையத்தை அண்மிக்க முன் உள்ள வசாவிளான் வீதிச் சந்தியில், இராணுவத்தினர் நிற்பதை, திடீரெனக் காண்கின்றார். பின்னால் இருந்தவர்களை பதற்றமடையாது இருக்குமாறு கூறிவிட்டு, தொடர்ந்தும் மோட்டார் சைக்கிளை ஓட்டினார்.



ஆனாலும் இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளை மறித்துவிட்டனர். ஏதோ கூறித் தப்பிக்க முயல்கின்றனர். இதற்கிடையில் கிட்டண்ணையின் சட்டைப் பையில் இருந்த சயனைட் குப்பியை இராணுவத்தினர் கண்டுவிட்டனர். அந்தக் காலத்தில் எமது சயனைட் குப்பி பற்றி எதிரிக்கு எதுவும் தெரியாது. அந்தக் குப்பி என்னவென்று கிட்டண்ணையிடம் விசாரிக்கின்றனர். தொய்வு நோய்க்குப் பயன்படுத்தப்படும் மருந்து எனக் கூறித் தப்பிக்க முயல்கிறார். ஆனாலும் விசாரித்துவிட்டு விடுவதாகக் கூறி, பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்கின்றனர்.



மோட்டார் சைக்கிளில் வந்த மற்றைய இரு இளைஞர்களுள் ஒருவரை இராணுவ 'ட்றக்'கில் ஏற்றிவிட்டு, கிட்டண்ணையை, மற்றையவருடன் மோட்டார் சைக்கிளில் வரும்படி பணித்துவிட்டு, பலாலி இராணுவ முகாம் நோக்கிச் செல்கின்றனர்.

வாகன அணிகளுக்கு நடுவே மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருக்கின்றது.

அச்சுவேலி வசாவிளான் பாதையில், 'மக்கோண' என அழைக்கப்படும் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்குச் செல்லும் ஒழுங்கைக்கு அருகில், வாகன அணி செல்கின்றது.


தப்பியோடுவதற்குச் சந்தர்ப்பமும் இடமும் இதுதான் என, கிட்டண்ணை முடிவெடுக்கின்றார்.

திடீரென அந்த ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிளைத் திருப்பி, வேகத்தை அதிகரிக்கின்றார்.

அதிர்ச்சியடைந்த இராணுவத்தினர் வாகனங்களை நிறுத்திச் சுட எத்தனிக்குமுன், மோட்டார் சைக்கிள் சுமார் 50 யார் தூரம் சென்றுவிடுகின்றது.

துரதிர்ஷ்டவசமாக, ஒழுங்கை வேலியில் கட்டப்பட்டபடி ஒழுங்கையின் எதிர்ப்பக்கத்தில் நின்று மேய்ந்துகொண்டிருந்த மாட்டின் கயிற்றில் சிக்கி, மோட்டார் சைக்கிளுடன் கிட்டண்ணை வீழ்ந்துவிட்டார். அருகில் சிறு பற்றைகளும், அப்பால் வாழைத்தோட்டங்களும் இருந்தன.

சில வினாடிகளில் மோட்டார் சைக்கிள் வீழ்ந்து கிடந்த இடத்துக்கு விரைந்து வந்த கவசவண்டி, ரவைகளைப் பொழிந்து தள்ளியது. அருகிலிருந்த வாழைகள் ரவைகள் பட்டு முறிந்து வீழ்ந்தன.



ஆயினும் கிட்டண்ணை தப்பி ஓடிவிட்டார்.

* * *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# வன்னியெனும் வளநாடு

**வ**ட தமிழீழத்தின் தென் பாகத்தில் உள்ள வன்னி வள நாடு செந்நெல் விளையும் செழுமையான விளைநிலங்களும், சிறு குளங்களும், பாட்டுப்பாடுகின்ற குருவிகள், மிருகங்கள் வாழுகின்ற அடர்ந்த காடுகளும் நிறைந்த வளங்கொழிக்கும் மண்ணாக விளங்குகின்றது. அகன்ற கடல் வளமும் இங்கு உண்டு. ஆக முல்லை, மருதம், நெய்தல் ஆகிய மூவகை நிலங்களும், அவற்றிற்காய பண்புகளும் இங்கே உண்டு.

ஆடியும், பாடியும், விதைத்தும், அறுத்தும், உழைத்தும் வாழும் மக்களின் சந்தோசமான உயிர்ப்பு மிக்க கிராமியப் பண்பு நிறைந்த வாழ்க்கையைச் சீரழித்துவிட எதிரியானவன் எத்தனித்து வருகின்றான். எதற்கும் சளைக்காத இந்த வன்னி மண்ணின் அழகைக் கெடுத்த வடுக்களைக் காணும் எந்த ஒரு மனிதனின் இதயமும் நெகிழாமல் இருக்க முடியாது.

சிறிலங்கா இராணுவத்தினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் அலம்பில், செம்மலைக் கிராமங்களிலும் ஆக்கிரமிப்புக்குள்ளான மட்டிக்குடியிருப்புக் கிராமத்திலும், நெடுங்கேணி, குமுழமுனை போன்ற கிராமங்களிலும் ஏற்பட்ட அழிவு அழியாத வடுக்களாக நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.

தேவாலயங்கள், மருத்துவமனைகள், அஞ்சல் அலுவலகம், விவசாய ஆராய்ச்சித் திணைக்களம், பாடசாலைகள், குடிமனைகள் என சகலதுமே எதிரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அவ்விடங்களை விட்டு துரத்தி அவர்களின் மீன்பிடிப் பட குகளைக் கைப்பற்றி பாது காப்பு அரண்களை அமைத் தது. அப்படகுகளில் சில அணைகளுடன் அணைகளாக

02.06.1992 அன்று இலங்கை வான்படை விமா னங்களினால் குண்டுவீசிய ழிக்கப்பட்ட கரைத்துறைப் பற்று பலநோக்கு கூட்டுற வுச் சங்கத்தின் செம்மலைக் கிளை சங்கக் கட்டிடம்.

யின் கோர இனவெறிப் பசிக்கு தீனியாக்கப்பட்டிருக்கி றன.

கடற் தொழிலை நம்பி நாளாந்த வாழ்வை ஓட்டும் மக்களின் வாழ்வில் மேலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத் தும் நோக்கத்தோடு, அவர் களை தொழிலை இழந்தவர்க ளாக்கி நடைப்பிணமாக்கும் செயலில் சிறிலங்கா இன வெறி அரசின் இராணுவம் பின்னிற்கவில்லை. அந்த மக்க ளது வாழ்மனைகளை எரித்து






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிறிலங்காப்படைகள் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து அளம்பில் கிராமம் வரை முன்னேறிய 'ஒப்பரேஷன் செவண்பவர்' என்ற நடவடிக்கையில் தனது விமானக்குண்டுவீச்சுக்கு இலக்காக்கிய செம்மலை மகாவித்தியாலயம்.

02.06.1992 அன்று இக்கட்டிடம் குண்டுவீசி அழிக்கப்பட்டது.

டோசர்களால் தள்ளப்பட்டு உடைந்து காணப்படுகின்றன.

வெய்யிலில் குளித்து, வியர்வை சிந்தி, மழையில் நனைந்து காலம் காலமாய் கஸ்ரப்பட்டு உழைத்த சொத்துக்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன.

பல நூற்றுக்கணக்கான தென்னைகளை அடியோடு வெட்டி அவற்றையும் பதுங்கு குழிகள் அமைப்பதற்கு இராணுவத்தினர் பயன்படுத்துகின்றார்கள். பல தென்னைகள் எறிகணைத் தாக்குதலுக்குள்ளாகிக் காணப்படுகின்றன. தமிழரின் பொருளாதாரத்தை அடியோடு நாசமாக்கும் எண்ணத்துடன் சிங்கள இராணுவம் இங்கு வெறித்தனமாடியிருக்கிறது.

ஆக்கிரமிப்பு இராணுவம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி பின்வாங்கிய போது கடற்கரையோரமாக இருந்த வீடுகளில் இருந்து சூறையாடிய தளபாடங்கள் ஆங்காங்கே நெஞ்சைத் துயர் பிழியும் வண்ணமாய் சிதறிக் கிடந்தன.

வயலில் நின்று கடுமையாக உழைத்து அறுவடை செய்து தம் உணவுக்காக சேமித்து வைத்த நெல் கடற்கரையெங்கும் சிந்தப்பட்டுக் கிடந்தன. அங்கிருந்த கிணறொன்றினுள் ஏராளமான நெல் கொட்டப்பட்டு நாசப்படுத்தப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் பலரது வீடுகள் முற்றாக குண்டு வைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதோடு, கதவுகள், சாளரங்கள் போன்றவற்றை தமது பதுங்கு குழிக்குள் மண் சொரிந்து விழாமல் இருப்பதற்காக பயன்படுத்தியிருக்கிறார்கள். வீடுகளின் ஓலைகள் யாவற்றையும் கழற்றி பதுங்கு குழிக்கு மேல் போட்டுள்ளார்கள். இவ் அழிவின் கோர முகத்தை பார்த்த வண்ணமாய் டொலர் பாம், கென்ற் பாம் ஆகியவை உள்ள கிராமத்திற்குச் சென்றோம். சோகமாய் காற்றில் கீற்றசைக்கும் தென்னைமரம், நீள வெறித்துக் கிடக்கும் செம்மண் வீதி, அந்தக் கிராமத்தின் இனிய நாதமாய் இருந்த உயிர் வாழ்வை உருக்குலைத்த அந் நிகழ்வுகளை



அளம்பில் கிராமத்தில் இராணுவ முகாமொன்றை அமைத்துக்கொண்ட சிறீலங்காப்படைகள், தமிழீழ மக்களின் கடற்தொழிற் படகுகளை அணைக்கட்டில் தள்ளிச் செருகிவிட்டு, அதனைக் காப்பரணாக மாற்றியுள்ளனர். நூற்றுக்கணக்கான கண்ணாடி இழைப் படகுகள் இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அளம்பில் இராணுவ முகாமை விட்டு சிறீலங்காப் படைகள் சென்றபோது, கிராம மக்களின் வீட்டுத் தளபாடங்களை கப்பலில் ஏற்றிச் சென்றனர். ஏற்றமுடியாமல் கைவிட்டுச் சென்ற பொருட்களின் ஒரு பகுதி கடற்கரையில் குவிக்கப்பட்டிருக்கிறது.**



நினைவில் எழுப்பிச் சூடேற்றின.

அக்கிராமத்தில் ஒரு நிகழ்வு.

அந்தக் கிராமத்தில் இராணுவம் வெறித்தனமாட இருப்பதை அறிந்த போராளிகள் அங்குள்ள மக்களை பாதுகாப்பான பிரதேசங்களுக்கு அழைத்திருந்தனர். இவ் அறிவித்தலை விடுக்கச் சென்ற போராளிகள் அங்கிருந்த 110 வயதுடைய மூதாட்டியை, "இந்த இடத்தைவிட்டு எம்முடன் வாருங்கள்" எனக் கேட்டனர். அப்போது அந்த மூதாட்டி அவ்விடத்திலிருந்தபடியே விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டார். "நான் பிறந்த நாள் தொட்டு இங்கதான் வாழ்கிறன். என்னை இங்க இருந்து கூட்டிக் கொண்டு போயிடாதேங்கோ" என அந்தத் தாய் அடம்பிடித்து அழுதாள். இதனால் எமது போராளிகளும் அப்படியே விட்டுவிட்டு சென்றுவிட்டனர்.

இந்த ஆச்சியை இவரது எழுபது வயதுடைய மூத்த மகனே உணவு கொடுத்துக் கவனித்து வந்தார். அழைத்த மூன்று நாட்களின் பின் இராணுவம் முன்னேறி இவர்கள் இருந்த வீடு நோக்கியும் வந்தது. இதன்போது இவர்களை நோக்கி சிங்கள இராணுவம் ''புலிப்படை அருகே நிற்குதா?" எனக் கேட்டனர். இவர்கள் இல்லை எனக் கூறியதும், அவர்களைத் தாண்டி இராணுவம் முன்னேறிச் சென்ற போது அக்கிராமத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த துணைப்படையினர் இராணுவத்துடன் சண்டையிட்டனர். துணைப்படையினர் இராணுவத்தினருடன் சண்டையிட்டதைத் தொடர்ந்து இராணுவம் பின்வாங்கிச் சென்றது. செல்லும்போது 110 வயதுடைய ஆச்சியையும் 70 வயதுடைய அவரது மகனையும் சுட்டுவிட்டுச் சென்றுவிட்டது.

அந்தக் கிராம மக்கள் அனைவரும் வெளியேறிய நிலையிலும் இப்பாட்டி தான் வாழ்ந்த மண்ணை விட்டு வெளியேற மறுத்து விம்மி விம்மி அழுத அந்தச் சம்பவம் அனைத்துப் போராளிகளினது மனதையும் உறுத்தியதொரு நிகழ்வாகும்.

இந்நிகழ்வு தொடர்பான முழு விபரத்துடன் 'மண் பற்று' எனும் நூலை வெளியிட

**அளம்பில் கிராமத்தில் முகாம் அமைத்த இராணுவம் முகாமைக் கைவிட்டுச் சென்ற போது சேதாமாக்கி விட்டுச் சென்ற பொருட்களின் ஒரு பகுதி.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முயற்சிகள் எடுத்து வருகின்றோம்.

இந்த மக்களின் எழுச்சியுடன் கூடிய துணைப்படையின் வளர்ச்சியும் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்கனவே. பெரும்பாலான மக்கள் துணைப்படையில் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள். இராணுவ முன்னேற்றங்களின் போது இராணுவத்தை எதிர்த்து போரிட்டு வருகிறார்கள்.

ஆண், பெண் வேறுபாடின்றி இந்த மக்களில் பலர் துணைப்படையில் இணைந்து வருகின்றாக்கள்.

அழிவைக் கண்டு, அஞ்சிப் பயந்து துவண்டுவிடும் வாழ்வை வெறுத்து சுதந்திர மனிதர்களாக வாழ்வதற்காக போராடவும், அதற்காக உயிரைத் தியாகம் செய்யவும் தயாராகிவிட்டார்கள்.

இழந்த வாழ்வை மீட்டு இனிய தொலைந்த அந்த நாட்களை மீட்க அவர்கள் அணிதிரண்டு வருகின்றார்கள்.

**சுதந்திர பூமியில் நாளை அவர்கள் தலை நிமிர்ந்து நிற்பார்கள்.** □□



*ஆண்டு பலவாக அடங்கி,*
*குனிந்த தலை*
*மீண்டும் நிமிர்த்தாது இருக்கின்றாய்.*
*அந்தோ பார்*
*காலடிகள் பட்டுக் கசங்குகிறது புல்.*
*நாங்கள்*
*நாலடிகள் எடுத்து நடப்பதற்குள்,*
*முன்போல,*
*மீண்டும் நிமிர்ந்து முறைப்போடு நிற்கிறது.*
*யானையைக் கூட அடக்கினாள்,*
*"அரியாத்தை"*
*யாரிவள்?*
*உன் பூட்டி.*
*பூனைக்கண்ணோடு புகுந்த அந்நியனை,*
*ஓட விரட்டினான் ஒருவன்.*
*யாரிவன்?*
*உன் பூட்டன்.*
*வேண்டும் உனக்கிந்த வீரம்*
*தமிழனே!*
*கூண்டைத் திறந்து குதித்து வெளியேவா.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரத்தைத் தேடி...



### "என்ரை றைபிளை விட்டிட்டு வந்திட்டன். என்ரை றைபிளைத் தாங்கோ"

வெயில் கொளுத்தும் பெரு மணற்பரப்பான கட்டைக்காட்டில் சிறிலங்காப் படையினருடன் நடந்த மோதலில் காயமடைந்து, நினைவிழந்த நிலையில், வைத்தியசாலைக் கட்டிலில் கிடந்த அசோகா அரற்றிக் கொண்டிருந்தாள்.

போராளிகள் எப்போதுமே இப்படித்தான். தமது உயிரையும் விட தமது ஆயுதத்தைப் பெரிதாக நினைப்பவர்கள். தம்மைக் கொடுத்தேனும் ஆயுதங்களைக் காத்து நிற்பவர்கள். எந்தக் காலத்திலும், எந்த வேளையிலும் எம் தேசத்தை, எமது மக்களைப் பாதுகாத்து நிற்கக் கூடியவை இந்த ஆயுதங்கள்தான் என்பதை இவர்கள் நன்குணர்ந்தவர்கள். உயிரைக் கொடுத்தேனும் ஆயுதங்களை எடுக்கவேண்டும் என்ற இந்த உணர்வும், ஒரு கைத்துப்பாக்கியோடு ஆரம்பிக்கப்பட்ட எமது இயக்கம் இன்று உலகே வியந்து நிற்கும் அளவிற்கு வளர்ந்து நிற்பதற்கு ஒரு காரணமாக, உறுதுணையாக.....

அசோகா.... வைத்தியசாலைக்கு வந்து நெடு நாட்களாகிவிட்டன. அவளது காயம்



2ம் லெப் அசோகா

மிகப் பெரியது. இடுப்புக்குக் கீழ் உணர்ச்சியே இல்லாமல் சில்விட்டுப்போய்....

அவள் தனது நிலையை ஓரளவிற்கு விளங்கிக் கொள்கிறாள்.

ஆனாலும், மனதுக்குள் சின்னதாக ஓர் எதிர்பார்ப்பு.... வைத்தியர்கள் வந்து 'பிரச்சினை இல்லை. இன்னும் கொஞ்ச நாளில் சுகமாகிவிடும். நீர் வழமைபோல் செயற்படலாம்' என்று சொன்னால், தொடர்ந்தும் சண்டைக்குப் போக முடியுமென்றால்.... ஓ.... எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்? அதைவிடச் சந்தோசமான விடயம் வேறென்ன இருக்க முடியும்?

அவளுள் சிறிதாக நம்பிக்கைக் கோடுகள்....

ஆனல், இனி அவளால் செயற்படவே முடியாது என்று வைத்தியர்கள் வந்து சொன்ன போது,

இனித் தன்னுடைய கைகள் ஆயுதங்களைப் பற்றிக் கொள்ளாது...

தன்னுடைய றைபிள் தனக்குக் கிடைக்காது என்ற ஏக்கம் சட்டென மனதைப் பற்றிக் கொள்ள, அவளிடமிருந்து மெதுவான விசும்பலொலி நீண்ட நேரம் கேட்டுக் கொண்டே இருந்தது.

இருபது வயதில் உடலின் கீழ்ப்பகுதி தனது இயக்கத்தை நிறுத்திவிடுவது என்பது.... அந்த வேதனையை வார்த்தைகளால் எப்படிச் சொல்லமுடியும்? அதுவும் கணத்திற்குக் கணம் எதிரியை வீழ்த்த வேண்டும், எங்கள் நிலத்தை மீட்கவேண்டும் என்ற துடிப்போடு இருக்கும் போராளிகளுக்கு இந்நிலை வருவதென்பது.... ஆனாலும் அசோகா இயல்பாக இருந்தாள். இந்தப் பிள்ளையின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விட்டதே எனப்பார்த்தவர்கள் பரிதாபப் பார்வையை வீசிய வேளை, இவள் சிரித்தபடியே இருப்பதற்குப் பழகிக்கொண்டாள். எந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலையில் இருந்தாலும் இந்தப் போராட்டத்தை விட்டு விலகப்போவதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டாள். விடுதலைப் புலிகள் அளவிடற்கரிய உறுதிமிக்கவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக எங்கள் அசோகா.

'மாவீரன் அசோக்' 'மாவீரன் சின்ன அசோக்'

இருவரும் அசோகாவின் உடன் பிறந்தவர்கள். இந்த மண்ணின் விடுதலைக்கான பணிகளின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள். அசோக் இவளுக்கு மூத்தவன். 'அண்ணா, அண்ணா' என்று இவள் அவனில் உயிரையே வைத்திருந்தாள். இவளிடம் வரும் பொதுமக்களில் யாராவது "ஏற்கனவே இரண்டு பேர் வீரமரணம் அடைஞ்சிட்டினம். நீயும் இவ்வளவு நாளும் இருந்து விட்டாய்தானே? அதோட மூன்றுதரம் காயமும் பட்டுவிட்டாய். இந்த முறை பெரிய காயமாய் இருக்கு. இது மாறினவுடன் வீட்டுக்குப் போவன்" என்று சொன்னால், "வீட்டை போறதுக்கு நான் இயக்கத்துக்கு வரேல்லை. என்ரை அண்ணாவின்ரை பாதையிலை அவன் விட்ட பணியை நான் தொடர்ந்து செய்ய வேணும். என்னாலை ஏலாமல் போனாலும், இந்தப் போராட்டத்தோடு இருந்துதான் சாவன்" என்று கோபத்தோடும், நீர் நிறைந்து குளமாகிப்போன கண்களோடும் பதிலளிப்பாள்.

ஆயுதம் ஏந்தி, எதிரியுடன் கொடூரமாகச் சண்டையிடும் புலிவீரர்கள்தான் அன்பு என்ற சொல்லுக்குள் ஆழமாகக் கட்டுண்டு கிடப்பவர்கள். எல்லோரிடமும் அன்பு செய்கின்ற இவர்களது இயல்புதான் இவர்களைப் போராடவும் வைத்தது. அநீதியைக் கண்டு கிளர்ந்தெழவும் செய்தது.

குடும்பத்தில் அசோகா மூத்தபெண்ணாதலால் இவளுக்கு இளையவர்கள் எல்லோரும் இவளில் உயிரையே வைத்திருந்தனர். ஒரு முறை இவளைப் பார்ப்பதற்கு அவர்களை அழைத்துக் கொண்டு தந்தை வைத்தியசாலைக்கு வந்தபோது, "என்னைப் பார்க்க வரவேண்டாம்" எனக் கண்டித்து அனுப்பியவளிடம் அருகில் நின்ற தோழி, "ஏன் அசோகா அவையளை வரவேண்டாம் என்றனி? உனக்குப் பாசமே இல்லை" என்றபோது, "எனக்கும் ஆசைதான் என்ரை கடைசித் தம்பிமார் இரண்டு பேரையும் பார்த்துக்கொண்டே இருக்கோணும் போலை. ஆனா என்ரை நிலை எனக்குத் தெரியும். நாளைக்கு நான் செத்துப் போயிட்டா அதுகள்தான் நினைச்சு நினைச்சு வேதனைப் படுங்கள்" என்றபடி கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

1990ம் ஆண்டு இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட அசோகா பலாலியிலும், கோட்டையிலும் எதிரிகளை வெளியேறவிடாது காவலில் நின்றாள். அந்தப் பணியின் போது இரண்டு தடவைகள் விழுப்புண்களையும் ஏற்றுக் கொண்டாள்.

'ஓய்வு'

அசோகா இதை எப்போதுமே விரும்பியவளில்லை. இவளது ஒரு கால், காயமடைந்த காரணத்தால் அடிக்கடி வீங்கி வேதனை கொடுக்கும். இதனால், ஆனையிறவுப் போருக்கு முன் 'ரோந்து' போகின்ற வேளைகளில் இவளது தோழிகள் "அசோகா கால் வீங்கிக் கிடக்கு. இன்றைக்கு வரவேண்டாம்" என்றால், "இல்லை எனக்கொண்டும் செய்யேல்லை. நானும் வாறன்" என்றபடி புறப்படுவாள். இவளைப் போன்றவர்களைத் தன் புதல்வர்களாகப் பெற்றதனால்தான் எங்கள் தேசம் இத்தனை சோதனைகள், வேதனைகளுக்கு மத்தியிலும் யாருக்கும் பணிந்துவிடாது பெருமையோடு நிமிர்ந்து நிற்கிறது.

உடலின் கீழ்ப்பகுதி மரத்துப் போய் இயக்கமற்றிருந்தாலும் மனதால் இவள் உற்சாகமா

**"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண்ணின் வளத்து உற்பத்திகளை நேசிக்கின்றேன். என் வாழ்வுக்கே ஆதாரமான இந்த மண்ணைக் காக்க நான் எதையுமே இழக்கத் தயாராக இருக்கின்றேன்."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவே இருந்தாள். போராட்டம் பற்றிக் கதைத்தாள். தலைவரை நினைத்துப் பெருமைப்பட்டாள். தனது ஆயுதத்தை எண்ணும் போது மட்டும் அவளிடம் இருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்படும். அவள் திரும்பவும் தான் குணமடைய வேண்டுமென்று நினைத்தது, தனது ஆயுதத்தை மீண்டும் ஏந்துவதற்காகத் தானே ஒழிய வேறொன்றிற்காகவும் அல்ல.

தனது வாழ்வு பற்றிக் கனவு காண்கின்ற வயதில் இந்தத் தேசத்தைப் பற்றியும், தலைவரைப்பற்றியும் சிந்தித்திருந்தவள் அசோகா. இவள் மட்டுமல்ல, 'சுஜே'யும் இவளைப்போலத் தான் இருந்தாள். உடலின் அரைவாசிப்பகுதி இயங்க மறுத்த நிலையில் எம்மோடு சில காலம் இருந்துவிட்டு மறைந்து போனாள். உடலின் அரைவாசி தன்னுடைய இயக்கத்தை நிறுத்தியபோதும், தமது விடுதலை உணர்வில் ஒரு துளியையேனும், இழக்காதிருந்த இவர்கள், வீரத்திற்கும் உறுதிக்கும் தமது செயல்களால் விளக்கங் கொடுத்து, எமது விடுதலைப் பாதையில் ஊக்க சக்தியானவர்கள்.

ஐந்து மாதங்கள் இடுப்புக்குக் கீழ் உணர்ச்சியை இழந்திருந்த எங்கள் அசோகா 28.12.1991 அன்று தன் மூச்சை நிறுத்திக்கொண்டாள். எந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தாளோ, அந்த மண்ணுக்குள்ளும், மக்களுக்குள்ளும் புரட்சி நெருப்பாகக் கலந்து போய்விட்டாள்.

- தமிழவன் -

**சாந்தன் கதைகள் மூன்று**

## மூண்டெரியுந் தீயின் மூலப்பொறி

'நான் மனிதன்'
'நீ தமிழன்'
'நான் மனிதன்'
'இல்லை, நீ தமிழன்'
'நான் மனிதன், நான் மனிதன்'
'நீ தமிழன், நீ தமிழன்'
'சரி, நான் தமிழன், நான் தமிழன்'

## மண்ணும் மூளையும்

மீண்டும் ஊரடங்கு அறிவித்தல். இடம்பெயரச் சொல்லும் எச்சரிக்கைகள்....
எந்த நேரமும் ஒரு ஊழி தொடங்கலாம்.....
தெருவில் மூட்டை முடிச்சுக்களும், முகத்தில் கவலைகளுமாய்ச் சனங்கள்.....
இடையில் ஒரு முச்சில்லு மிதிவண்டி. பயணிகளிருக்கையில் இரண்டு பெண்கள். மருத்துவமனையால் வீடு திரும்பும் கோலத்தில் ஒரு இளம் பெண். அருகில் துணையாய் ஒரு மூதாட்டி. அவள் அணைப்பில் துணிச் சுருளிற் துயிலும் ஒரு புத்தம் புதுப் பூக்குஞ்சு.

## இளங்கன்று/இசைவாக்கம்?


பள்ளிப் பக்கம் பிரச்சினை.
'படிப்பும் வேண்டாம், பள்ளியும் வேண்டாம்..... பிள்ளை வந்திடட்டும் கடவுளே.....' பெற்றவர்கள் நேர்ந்தார்கள்.
பொம்பர்களும், ஹெலிகளும் போய்த் தொலைய பிஞ்சுகள் வந்தார்கள். பள்ளியின் வாயிலில் பதட்டமும் பயமுமாய் பார்த்திருந்தவர்கள் பிள்ளையை அணைத்துக் கொண்டார்கள்.
'பயந்திட்டியா ராசா?'....
'அம்மா நாலு குண்டுதான் போட்டவங்கள்..... ஒருக்கா ஒரு பொம்மர் பதிஞ்சுது. ஆனா குண்டு போடாம எழும்பிவிட்டுது.... அது ஏன் அம்மா?'....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வதிவிட வேளாண்மைப் போட்டி ஏற்படுத்திய சமூக பொருளாதார மாற்றங்கள்.




வதிவிட வேளாண்மைப் போட்டியின் முக்கியத்துவத்தை இன்று தமிழீழ மக்கள் உணருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" எனக் கூறப்படினினும், சிறீலங்கா இனவாத அரசானது தமிழ் மக்களை பட்டினிச் சாவுக்குள்ளாக்கி, அழிக்கத் திட்டமிட்ட இவ்வேளையில் பழையவற்றை நாடி எமது தேவையைப் பூர்த்தி செய்ய நாம் துணிந்துள்ளோம் என தமிழீழ மக்கள் துணிந்தமை கண்கூடு.

அதாவது, எரிபொருளுக்கும் உணவுப் பொருட்களுக்கும் தடைவிதித்த பேரினவாத அரசானது மின்சாரம் வருவதைக்கூட தடைபண்ணியது. அதுமட்டுமல்லாமல் நல்லின கோழிகளையோ, கால்நடைகளையோ கொண்டுவர முடியாத அளவு சிறீலங்கா அரசு தமிழ் மக்களை நசுக்க திட்டமிட்டது. இயந்திர வாகனங்களில் இயந்திர உலகத்தில் செயல்பட்ட மக்கள் சைக்கிளில் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இது எமக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தவில்லையாயினும் பட்டினிச்சாவை ஏற்க முடியுமா?

சிறீலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடையை உடைத்தெறிய தமிழீழ ஆய்வு நிறுவனம் பலதரப்பட்ட திட்டங்களை வகுத்து உற்பத்தியில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது. இதனால் தரிசு நிலங்களும் பயன்படுத்தப்பட்டன. எரிபொருள் மின்சாரம் கிடைத்தபோது செய்கை பண்ணப்படாமல் கிடந்த காணிகள் கூட அவை இல்லாத இக்காலகட்டத்தில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டன.

கூட்டெரு, பசுந்தாட் பசளை, துலாப்பட்டை இறைப்பு, ஆடு மாடு வளர்ப்பென பலதரப்பட்ட உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கினர் தமிழீழ மக்கள். இன்று சமூக பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்படுகின்றது. தம்மிடமிருந்து தமிழீழம் எதனையும் ஏற்கமாட்டாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுமா என அஞ்சிய பேரினவாத அரசு அம்மாப் பச்சை என்ற அரிசியையும், அமெரிக்கனின் கோதுமை மாவையும், தரம் குறைந்த பால்மாவையும் அனுப்பியது. ஆனால் இங்கு குரக்கன் விளைந்தது. வதிவிட வேளாண்மைப் போட்டியினால் ஆடு மாடு பெருகியது. பால் பெருகியது. எமது தேவையின் கணிசமான பகுதி எம்மால் நிறைவு செய்யப்பட்டது.

வதிவிட வேளாண்மைப் போட்டியில் 12,211 குடும்பங்கள் பங்குபற்றியுள்ளனர். இவர்கள் மேற்கொண்ட திடீர் உற்பத்தி தமிழீழத்தின் ஒரு பங்கு தேவையை பூர்த்தியாக்கி உள்ளது என்றே கூறலாம். இதில் சகல மக்களும் எதிர்காலத்தில் கலந்துகொண்டு சிறீலங்காப் பேரினவாத அரசின் பொருளாதாரத் தடையை உடைத்தெறிய வேண்டும் என தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

எமது வீட்டிலேயே உடனடி மரக்கறி பெறக்கூடியதாக இருந்ததும் பால், முட்டை, இறைச்சி என்பவற்றைக் கூட நாம் விரும்பிய நேரம் பெறக் கூடியதாக இருந்ததும் இன்றைய இக்கட்டான இக்காலகட்டத்தில் எமக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

வதிவிட வேளாண்மைப் போட்டியில் பரிசு பெற்ற திரு. சி. சுகிர்தலிங்கம் அவர்கள் உயிர்வாயுத் தயாரிப்பின் மூலம் தனது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார். 2 மாடுகள் மூலம் 20 கிலோ சாணம் பெறுவதாகக் கூறும் அவர், அதனின்று கிடைக்கும் உயிர் வாயுவில் பெற்றோமாக்ஸ், நீர்ப்பம்பி, வாயு அடுப்பு, என்பவற்றை இயக்கி ஒளியைப் பெறுவதோடு நீர்ப்பாசனம், சமையல் ஆகியனவற்றையும் செய்கின்றார். இச் செயற்பாட்டை நேரில் காணக்கூடியதாக இருந்தது. *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முகமூடிகள் கிழிகின்றன

மிகத் தொன்மையான நாகரிகத்தை, பண்பாட்டை, ஆத்ம ஞானத்தின் அறிவொளியை, வேத விளக்கங்களை, தத்துவ ஞானங்களை, மானுட நேயத்தை, அண்ணல் காந்தியின் அகிம்சையை, நேருவின் பஞ்சசீலத்தை, இன்னும் உயர் விழுமியங்களைக் குறிக்கும் என்னென்ன அடைமொழிகள் உண்டோ, அத்தனையையும் தன்னகத்தே கொண்ட நாடு என நம்பப்பட்ட, நம்பவைக்கப்பட்ட நாடு அது. ஆனால் இன்று, அயோத்திய அவமானத்தில் அனைத்தையும் இழந்து அம்மணமாக நிற்கின்றது. இராமர் பிறந்ததும் அயோத்தியில். இந்தியா இறந்ததும் இன்று அயோத்தியில். கழிவிரக்கத்தால் இந்தியா கலங்கி நிற்கின்றது.

அயோத்தி சம்பவம் தற்செயலாக, சந்தர்ப்பவசத்தால் நடந்த நிகழ்வா? அவ்வாறுதான் உலகை நம்பவைக்க இந்தியா முயல்கிறது. ஆனால் இனி முடியாது. முகமூடிகள் கிழிகின்றன. உண்மையின் பயங்கரத் தோற்றம் மீண்டும் வெளி வந்து விட்டது. சிறிலங்காவில் 1983 கறுப்பு யூலை நிகழ்வுகளோடு அயோத்தி நிகழ்வை ஒப்பிட்டு ஒருவித (குரூர) திருப்தியைச் சிறிலங்கா காண்கிற அளவுக்கு இந்தியாவின் நிலை பாதாள மட்டத்திற்குச் சென்றுவிட்டது. உண்மை என்ன? இந்தியா என்கிற ஒரு நாடு வன்முறையில் பிறப்பிக்கப்பட்டது. வன்முறையின் கருவிலே அது உதித்தது. மனித உலகம் என்றும் மறக்காத கொடிய படுகொலைகள் மத்தியிலே நாடு உருவானது. அவை இன்றும் தொடர்கின்றன.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது நேரு அவர்கள் மேற்கொண்ட பெரும் முதல் இராணுவ அடக்குமுறையின் கோரங்கள் யாவும் இன்று வெளிவந்துவிட்டன. இந்தியாவிலேயே பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடியாகக் கருதப்படும் புச்சலபள்ளிசுந்தரையா அவர்களால் (1985 ல் இவர் மரணமானார்) எழுதப்பட்ட 'வீரத் தெலெங்கானா' என்ற வரலாற்று நூல் இன்றைய இந்தியாவின் நிலையை அன்றே கூறிவிட்டது. இந்நூல் தமிழில் தியாகு அவர்களால் 'வீரத் தெலெங்கானா: ஆயுதப் போராட்டமும், அதன் படிப்பினைகளும்' என மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இத் தியாகு என்பவர் முன்னர் நக்சலைட் என்று காரணம் காட்டி சிறையிலிடப்பட்டவர். பின்னர் இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தவர். தற்போது தமிழ் நாட்டில் தியாகி திலீபன் மன்றத்தின் தலைவர் சுந்தரையா அவர்கள் தெலங்கானாப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றியவர். போராட்டம் நடந்து 20



1950 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தெலெங்கானா போராளிகள்



வருடங்களின் பின்பே இந்நூல் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் முழுமையான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்திகளை வாசிக்கும் எவரும் இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதில் உள்ள பொய்மையை உணருவதோடு, பின்னொரு காலத்தில் இந்தியப்படைகள் தமிழீழத்தில் செய்த அட்டூழியங்களின் தோற்றுவாயினையும் காண்பர். பல வகையில் இந்தியப்படைகள் தமிழீழ வரலாறு ஏதோவகையில் தெலங்கானா நிகழ்வுகளோடு ஒத்துப்போவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஏறத்தாழ 47 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்வுகள் நோக்கி நாம் செல்லவேண்டும். இந்தியா சுதந்திரம் பெறமுன் அது தனித்தனி சமஸ்தானங்களாக நிலவுடமை பிரபுக்களின் பிடியிலிருந்தது. அவ்வாறு ஐதராபாத் என்கிற சமஸ்தானமும் நிஜாம் என்கிற கொடியவன் கையிலிருந்தது. இதன் ஒரு பகுதியாக இருந்ததுதான் உழவர் பெருமக்கள் பெரிதும் வாழ்ந்த தெலங்கானா பகுதி. நிலப்பிரபுக்களின் கொடுமையால் இம்மக்கள் பெரிதும் உழன்றனர். 80 வீத நிலங்கள் 3 அல்லது 4 வீதமானோர் கையிலிருந்தது. மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அப்போதைய பொதுவுடமைக்கட்சி இதற்குத் தலைமை தாங்கியது. இதுவே தெலங்கானாப் போராட்டம் எனப்படுகின்றது. இவ் உழவர் எழுச்சியானது ஆயுதப்போராட்ட வடிவமாகவும், கெரில்லாப் போராட்ட வடிவமாகவும் மாற்றம் பெற்றது. ஏறத்தாழ 5 ஆண்டுகள் (1946 - 1951) வரை நீடித்தது. முதல் இரண்டு ஆண்டுகள் நிஜாமின் ஆயுதப்படைக்கு எதிராகவும், பின்னர் இந்தியப்படைக்கு எதிராகவும் நடைபெற்றது. நேருவால் அனுப்பப்பட்ட 50,000 பேரைக் கொண்ட இந்தியப் படைகள் தெலங்கானா எங்கும் முகாம்களை அமைத்தன. இவர்கள் நோக்கம் உழவர் எழுச்சியை நசுக்கி அவர்களிடமிருந்த 10 இலட்சம் ஏக்கர் நிலத்தை மீட்டுத் திரும்பவும் பெரு நிலப்பிரபுக்களிடம் ஒப்படைப்பதுதான். இவர்கள்தான் தமிழீழத்திலும் புலிகளின் ஆயுதங்களைப் பெற்று இலங்கை அரசிடம் ஒப்படைக்க வந்தவர்கள் என்பதன் வரலாற்றுத் தொடர்பை நாம் இங்கே காணலாம். 1948 இல் நாடெங்கும் சுதந்திரம் குறித்து மக்கள் ஆனந்தப்பட்ட போது தெலங்கானாவில் நேருவின் படைகள் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டன. மிகவும் மூர்க்கத்தனமாக இப்படைகள் செயற்பட்டதற்கான ஆதாரங்கள் யாவும் இப்போது வெளிப்படுத்தப்பட்டுவிட்டன. தத்துவப் பெருமகனான நேருவிற்கோ உழவர் துயரம் குறித்து எவ்வித கவலையும் இருக்கவில்லை. ஏனென்றால் தொடக்கத்திலிருந்தே காங்கிரஸ் தலைவர்கள் நிலப்பிரபுத்துவத்தோடு கூட்டுச் சேர்ந்திருந்தார்கள். வாழ்நாளெல்லாம் விமானியாகப் பறந்து தற்செயலாகப் பிரதம மந்திரியான ராஜீவ் காந்தியின் காலத்திலே 60முதல் 70வீதம் வரையிலான சட்டமன்ற, நாடாளுமன்ற உறுபினர்கள் நிலவுடமை வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். எனவே நேருவின் காலம் பற்றி சொல்லத்தேவையில்லை.

சுதந்திர இந்தியாவின் முதல் இராணுவ நடவடிக்கையின் விளைவுகளைப் பாருங்கள். உழவர்களும், பொதுவுடமைக் கட்சியினருமாக மொத்தம் 4000 பேர் படுகொலை செய்யப்பட்டனர். (தற்போது இத்தொகை 6000 என சில ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது) மிகக் குரூரமான முறையில் இக்கொலைகள் நடாத்தப்பட்டன. நெருப்பிலிடல், லாறி வண்டியோடு கட்டி சாகும் வரை இழுத்தல், வைக்கற்போரில் போட்டு உயிரோடு கொழுத்துதல், பிறப்புறுப்பை துண்டித்துவிடல், கண்டதுண்டமாக வெட்டல், கொதிக்கும் வெந்நீரை ஊற்றிக் கொலை செய்தல் இவ்வாறு பற்பல 'நவீன' முறைகளைக் கையா

### எமது கிராமங்களை நாமே காக்கவேண்டும்

எமது பிள்ளைகளை நாமே இரத்தத் திலகமிட்டு களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். நாம் முன்னைய காலங்களில் சிங்களவர்களிடம் அடிவாங்கி ஓடினோம். ஆனால் இனியும் அவ்வாறு அஞ்சி ஓடக்கூடாது. சாவு அனைவருக்கும் வருவதுதான். ஆனால் அதை நாம் அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளவேண்டும். எதிரியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நீளவிடாது தடுக்கவேண்டும். சண்டைகள் நடைபெறும் இடங்களுக்கு வீரர்கள் சென்றுவிடுவதால் எமது கிராமங்களை நாமே காக்கவேண்டும்.

**முல்லைத்தீவில் துணைப்படை வீரர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு ஆயுதம் வழங்கும் வைபவத்தில் ஒரு துணைப்படை வீரர் பேசியது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணாண்டு வறுமையின் கொடுமை தாங்காமல் போராடியோர்களைக் கொன்றுகுவித்தார் நேரு. மேலும் பத்தாயிரம் பேர் 3,4 வருடங்களுக்கு காவல் முகாம்களில் சிறைகளில் வைக்கப்பட்டனர். 50,000 பேருக்கு மேற்பட்டோர் தொடர்ந்து அவ்வப்போது இராணுவ, பொலீஸ் முகாம்களில் கொடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். இராணுவத்தினரின் தேடுதல் வேட்டையால் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இலட்சக்கணக்கான மக்கள் சீரழிந்தனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மக்களின் உடமைகள் நாசமாக்கப்பட்டன, கொள்ளையடிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளானார்கள். இவ்வாறாக 16,000சதுரமைல் பரப்பில் 30 இலட்சம் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு உட்படுத்தப்பட்ட கதை தான் இது.

அடக்குமுறைக்குட்பட்ட கிராமங்களில் எல்லாம் ஜெனரல் சவுத்திரி தலைமையில் சென்ற இந்திய இராணுவம் விசித்திரமான வணக்க முறையொன்றை கடைப்பிடித்தது. ஒரு உதாரணம்: 1949ம் ஆண்டு யூலை 14ம் நாள் விடியற்காலையில் 200 இராணுவத்தினர் எல்மாரு என்கிற கிராமத்தை முற்றுகையிட்டனர். எவரையும் வெளியேறவிடவில்லை. விடிந்தபின் மக்களை மூன்று பகுதிகளாக உள்ளூர் பாடசாலை ஒன்றிற்கு கூட்டிச் சென்றனர். அங்கு ஆண்கள் எல்லோரையும் நிர்வாணமாக்கி 10 கசையடிகள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தனர். பின்னர் பிறந்த மேனியாக ஊர் முழுக்க ஊர்வலமாகக் கொண்டு சென்று கிராமத்திலுள்ள காந்தியின் சிலைக்கு முன்னால் அவ்வாறே விழுந்து வணங்கச் செய்தனர். அனேகமாக எல்லாக் கிராமங்களிலும் அண்ணல் காந்திக்கு அவ்வாறே "நிர்வாண நமஸ்காரம்" செய்யப்பட்டது.

கோரப்படுகொலைகள், உயிரோடு எரித்தல், கூட்டம் கூட்டமாக கொன்று குவித்தலோடு இந்தியப்படை நிற்கவில்லை. பல ஆயிரக்கணக்கான பெண்கள் மேல் மோசமான, இழிவான முறைகளில் பாலியல் வன்முறை பிரயோகிக்கப்பட்டது. இதிலுள்ள கொடுமை என்னவென்றால், 10 வயதுச் சிறுமியர், கர்ப்பிணித்தாய்மார், மகவைப் பெற்றெடுத்த தாய்மார் என மனிதம் இல்லாமல் தெலங்கானாப் பெண்களை வாட்டிவதைத்தனர். சுதந்திர இந்தியாவில் மக்களுக்கு முதல் கிடைத்த பரிசு இது. இது தான் இந்தியாவின் உண்மை முகம். மதவெறி, இராணுவ அடக்குமுறை, குடும்ப ஆதிக்கம், இவற்றினை மறைக்கும் ஜனநாயக வேடம். வேடம் கலைந்துவிட்டது. அயோத்தியில் பாபர் கட்டிய மசூதியை இடித்த பாரதீய ஜனநாயகக் கட்சி (சிவசேன ஆர்.எஸ்.எஸ் போன்றவை எல்லாம் அடக்கம்)க்கும் இடிக்குமட்டும் அதைப் பார்த்துக் கொண்டிருந்த காங்கிரஸ் கடசிக்கும் வேறுபாடு என்ன? எல்லாம் ஒரே முகம். இந்தியாவின் உண்மை முகம்.

* பாலகுமாரன் *

# தடைக்குமேல் தடை

சிறீலங்கா அரசால் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்ந்தவண்ணமே உள்ளது. சிறீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வடபகுதிக்கான தபால் சேவையை குறிப்பாக வெளிநாட்டுத் தபால்சேவையை முடக்கியுள்ளது.

எரிபொருள் தடை, பொருளாதாரத் தடை, அத்தியாவசியப் பொருட்கள் மீதான கட்டுப்பாடு, மருந்துப் பொருட்கள் மீதான தடை என்பவற்றின் தொடர் அம்சமாக தபால் தடை அமுலாக்கப்படுகின்றது. இதன் மூலம் தமிழரின் பொருளாதாரத்தை முற்றாக ஸ்தம்பிதம் அடையச் செய்து போராட்டத்தை தோற்கடித்து விடலாம் என சிங்கள அரசு நம்புகின்றது. இதற்காக அடிப்படை மனித உரிமை மீறல்களையும், சர்வதேச சட்டங்களையும், ஒப்பந்தங்களையும் மீற முற்பட்டுள்ளது. இந்த மனித விரோதச் செயலை உலகில் உள்ள நடுநிலமை ஸ்தாபனங்களும் மனித உரிமை அமைப்புக்களும் கண்டிக்கவேண்டியது அவர்களது தார்மீக கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொருள
# தடைக



பொருளாதார ரீதியான அழுத்தங்களை வென்றெடுப்பதற்கு பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி முழு மூச்சுடன் உற்பத்தியில் எமது மக்கள் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழ் மக்கள் மனதில் மேலோங்கி நிற்கும் விடுதலை உணர்வை, இராணுவ பலத்தைக்கொண்டு அடக்கிவிடும் அதேவேளை, பொருளாதாரத் தடையாலும் ஒடுக்கிவிடலாம் என்ற நினைப்போடு சிங்கள அரசு செயல்பட்டு வருகின்றது. உணவை ஆயுதமாக்கி தமிழ் மக்களை பட்டினியால் பணியவைத்து விட எண்ணுகிறது. தடைக்குமேல் தடை......; தொடர் சங்கிலியாக ஒவ்வொன்றையும் பறித்து வருகின்றது. உணவு உற்பத்தியில் பின்னடைவை ஏற்படுத்தி, சுய பொருளாதாரத்தைச் சிதைத்துவிட எதிரி திட்டமிட்டு இயங்குகின்றான். எரிபொருள் தடை, பசளைத் தடை, கிருமிநாசினித் தடை....; இரட்டிப்புத் துன்பங்கள் பெருகின.



# தகர்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ாதாரத்

# களைத்



தொழிலை இழந்து அதனால் வரும் வருவாயை இழந்தனர். உற்பத்திக் குறைபாட்டால் ஏற்பட்ட தட்டுப்பாடு பொருட்களின் விலையைப் பன்மடங்கு அதிகரித்தது. தமிழீழத்தில் போசாக்கின்மையான குழந்தைகளின் எண்ணிக்கை கூடிவருகிறது. எந்த நாடுகளின் உதவியுமின்றி எமது மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் சொல்லும் தரத்தன்று. குண்டுவீச்சு விமானங்களின் குண்டுவீச்சுக்கு மத்தியிலும் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமது மக்கள் உறுதியோடு நிற்கிறார்கள். போராட்டத்தை ஒடுக்கி விடுதலை உணர்வை மழுங்கடித்து விடலாம் என்ற எதிரியின் கனவு பொய்க்கும்.

எமது மக்கள் உறுதியினாலும், தியாகத்தினாலும், அவர்கள் கொண்ட மண்பற்றினாலும், விடுதலை உணர்வினாலும் ஒவ்வொரு தடைகளையும் முறியடித்துப் போராட்டத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.



# போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்பு


**16.04.1985 அன்று, சுதுமலை, சாவற்காட்டில் இருந்த எமது முகாமொன்றில் தவறுதலாகக் கைக்குண்டு வெடித்து வீரச்சாவடைந்த அன்புவைப் பற்றி கிட்டண்ணா களத்தில் பத்திரிகையில் எழுதியது.**

“ஓ” எம் தோழா உன் அன்பான நடத்தையால் உனக்கு அன்பாக நாமிட்ட பெயர் அன்பு. உன்னை இழந்தோம். எம் அன்பை இழந்தோம்.

அன்பு என்ற பெயரைக் கேட்டு சிலர் உன்னை சிறுவன் என்றோ, மிருதுவான தோற்றமுடையவன் என்றோ நினைக்கலாம். 6 அடிக்கும் கூடிய உனது உயர்ந்த தோற்றத்தையும், தினவெடுத்த திரண்ட தோள்களையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது.

உன்னால் பயிற்றப்பட்ட எம் இளைஞர்கள் நீ இறந்த செய்தி கேட்டு உன்மீது கொண்ட அன்பால் அவர்கள் அடைந்த துயர் சொல்லமுடியாதது. உன் வீரம் செறிந்த தியாக வரலாறு ஒவ்வொரு மக்களும் அறியவேண்டியது.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது குருநகர் இராணுவ முகாமில் இருந்து பொலிஸ் நிலையத்திற்கு உதவி கிடைக்காமல் தடைசெய்யும் பணியை செவ்வனே செய்து முடித்தவன். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கு முன்பாகவே குருநகர் முகாமுக்கு மிக அண்மையில் சென்று கண்ணிவெடியை நிலைப்படுத்த வேண்டும்: இது சரிவர நடந்தேறினால் மட்டுமே பொலிஸ் நிலையத் தாக்குதல் நடைபெற முடியும். இச்செயல் இடையில் குழம்புமானால் பொலிஸ் நிலையத் தாக்குதல் மட்டுமல்ல அதை நோக்கி அசைந்து கொண்டிருக்கும் எம் ஏனைய தோழர்கள் கூட உயிராபத்தை எதிர்நோக்கும் இக்கட்டான நிலைமை. இராணுவத்தினர் இரவு ரோந்துக்கு புறப்படுமுன் கண்ணிவெடியை நிலைப்படுத்தவும் வேண்டும். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கும்வரை அமைதியைப் பேண வேண்டிய பொறுப்பான வேலைக்காக “வெடிமருந்து” Explosiveல் தேர்ச்சிபெற்ற அன்பு நியமிக்கப்பட்டான்.



தனபாலசிங்கம்
(வெத்திலைக்கேணி)

வெற்றிகரமாக கண்ணிவெடிகளை நிலைப்படுத்திய அன்பு G3 A3 என்ற தானியங்கி ரைபிளை தாங்கி பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கியதும், முகாமை விட்டுப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது G3 A3 ஆல் சரமாரியாக “இந்தா” “இந்தா” என்று சுட்டு அவர்களை விரட்டிய அழகை இப்போதும் தோழர்கள் நினைவு கூர்ந்து கண்ணீர் சொரிகின்றனர்.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கி எமது தோழர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறும் வரை மிகப் பலம் பொருந்திய குருநகர் முகாமில் இருந்து எந்த ஒரு கவசவாகனமோ, அல்லது இராணுவப் பிரிவையோ வெளியே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ாதாரத்
# களைத்





தொழிலை இழந்து அதனால் வரும் வருவாயை இழந்தனர். உற்பத்திக் குறைபாட்டால் ஏற்பட்ட தட்டுப்பாடு பொருட்களின் விலையைப் பன்மடங்கு அதிகரித்தது. தமிழீழத்தில் போசாக்கின்மையான குழந்தைகளின் எண்ணிக்கை கூடிவருகிறது. எந்த நாடுகளின் உதவியுமின்றி எமது மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் சொல்லும் தரத்தன்று. குண்டுவீச்சு விமானங்களின் குண்டுவீச்சுக்கு மத்தியிலும் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமது மக்கள் உறுதியோடு நிற்கிறார்கள். போராட்டத்தை ஒடுக்கி விடுதலை உணர்வை மழுங்கடித்து விடலாம் என்ற எதிரியின் கனவு பொய்க்கும்.

எமது மக்கள் உறுதியினாலும், தியாகத்தினாலும், அவர்கள் கொண்ட மண்பற்றினாலும், விடுதலை உணர்வினாலும் ஒவ்வொரு தடைகளையும் முறியடித்துப் போராட்டத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

# போம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்பு


**16.04.1985 அன்று, சுதுமலை, சாவற்காட்டில் இருந்த எமது முகாமொன்றில் தவறுதலாகக் கைக்குண்டு வெடித்து வீரச்சாவடைந்த அன்புவைப் பற்றி கிட்டண்ணா களத்தில் பத்திரிகையில் எழுதியது.**

“ஓ” எம் தோழா உன் அன்பான நடத்தையால் உனக்கு அன்பாக நாமிட்ட பெயர் அன்பு. உன்னை இழந்தோம். எம் அன்பை இழந்தோம்.

அன்பு என்ற பெயரைக் கேட்டு சிலர் உன்னை சிறுவன் என்றோ, மிருதுவான தோற்றமுடையவன் என்றோ நினைக்கலாம். 6 அடிக்கும் கூடிய உனது உயர்ந்த தோற்றத்தையும், தினவெடுத்த திரண்ட தோள்களையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது.

உன்னால் பயிற்றப்பட்ட எம் இளைஞர்கள் நீ இறந்த செய்தி கேட்டு உன்மீது கொண்ட அன்பால் அவர்கள் அடைந்த துயர் சொல்லமுடியாதது. உன் வீரம் செறிந்த தியாக வரலாறு ஒவ்வொரு மக்களும் அறியவேண்டியது.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது குருநகர் இராணுவ முகாமில் இருந்து பொலிஸ் நிலையத்திற்கு உதவி கிடைக்காமல் தடைசெய்யும் பணியை செவ்வனே செய்து முடித்தவன். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கு முன்பாகவே குருநகர் முகாமுக்கு மிக அண்மையில் சென்று கண்ணிவெடியை நிலைப்படுத்த வேண்டும்: இது சரிவர நடந்தேறினால் மட்டுமே பொலிஸ் நிலையத் தாக்குதல் நடைபெற முடியும். இச்செயல் இடையில் குழம்புமானால் பொலிஸ் நிலையத் தாக்குதல் மட்டுமல்ல அதை நோக்கி அசைந்து கொண்டிருக்கும் எம் ஏனைய தோழர்கள் கூட உயிராபத்தை எதிர் நோக்கும் இக்கட்டான நிலைமை. இராணுவத்தினர் இரவு ரோந்துக்கு புறப்படுமுன் கண்ணிவெடியை நிலைப்படுத்தவும் வேண்டும். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கும்வரை அமைதியைப் பேண வேண்டிய பொறுப்பான வேலைக்காக “வெடிமருந்து” Explosiveல் தேர்ச்சிபெற்ற அன்பு நியமிக்கப்பட்டான்.



**தனபாலசிங்கம் (வெத்திலைக்கேணி)**

வெற்றிகரமாக கண்ணிவெடிகளை நிலைப்படுத்திய அன்பு G3 A3 என்ற தானியங்கி ரைபிளை தாங்கி பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கியதும், முகாமை விட்டுப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது G3 A3 ஆல் சரமாரியாக “இந்தா” “இந்தா” என்று சுட்டு அவர்களை விரட்டிய அழகை இப்போதும் தோழர்கள் நினைவு கூர்ந்து கண்ணீர் சொரிகின்றனர்.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கி எமது தோழர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறும் வரை மிகப் பலம் பொருந்திய குருநகர் முகாமில் இருந்து எந்த ஒரு கவசவாகனமோ, அல்லது இராணுவப் பிரிவையோ வெளியே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றாமல் தடுத்து எம் வெற்றிக்கு உறுதி அளித்தவன் அன்பு.

எம்மோடு தங்கி இருக்கும் போது ஒரு நாள் அன்பு தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை மெதுவாக வெளியே எடுத்தான். ஒரு நிழற்படம் கையிலிருந்து நழுவிக் கீழே நிலத்தில் வீழ்ந்தது. அன்பு அதை எடுத்தான். அவன் நெஞ்சு படபடத்தது. படத்திலிருந்து அவனை நோக்கியது பழக்கமான, அழகிய அவனின் காதலியின் உருவம். சாறி அணிந்திருந்தாள். அது அவளுக்கு மிகவும் இசைந்திருந்தது. ஒடிசலான கொடி இடை உடைய அந்த அழகிய பெண்ணின் ஒளிவீசும் பெரிய வட்ட விழிகள் அன்பை ஊடுருவும் நோக்குடன் பார்த்துக் கொண்டிருந்தன.

அன்பு அந்த விழிகளை நெடுநேரம் நோக்கியவாறு இருந்தான். அவன் உள்ளம் இனந்தெரியாத இனிய சோகத்தால் நிறைந்தது. விருப்பமான சோகப்பாட்டு ஒன்று மாலை வேளையில் தூரத்திலிருந்து கேட்கும்போது உணர்வது போன்ற சோகம் அது. நிழற்படத்தின் மறுபக்கம் "அன்பே மறந்து விடாதே" என்று எழுதப்பட்டு இருந்தது. அதனுடன் இருந்த கடிதத்தை மீண்டும் படித்தான். கணக்கிட முடியாத தடவைகள் மீண்டும் மீண்டும் படித்ததால் கடிதம் கசங்கி மடிப்புகளில் விடத் தொடங்கி இருந்தது. நிழற்படத்தை மீண்டும் பார்த்தான்.

எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாயா? எதிர்பார் எதிர்பார்! காதலிக்கிறாயா? காதலி காதலி! இனியவளே, தமிழீழம் கிடைக்கட்டும். நாம் இன்பமாக வாழலாம் என்று அவன்

**தன்னுடைய வயிற்றோடு குண்டை அணைத்துக் கொண்டான். வெடியதிர்வுகளோ, அல்லது குண்டுச் சிதறல்களோ மற்றைய தோழர்களை பாதிக்க விடாமல் அவை அனைத்தையும் தன் உடலால் ஏற்றுக்கொண்டான்.**

முணுமுணுத்தது எம் காதுகளுக்கு கேட்டதோ அல்லது நாம் உணர்ந்து கொண்டோமோ தெரியவில்லை.

நாம் தாக்குதலுக்குச் செல்லும் பொழுதெல்லாம் "ரொக்கட் லோஞ்சரை" அன்புதான் எடுப்பான். அதை தூக்கிச் செல்லும் உடல் வலுவும், சிறந்த பயிற்சியும் அன்புவிடம் இருந்ததால் அவனை நாம் "டோய் லோஞ்சர்" என்று அன்பாக அழைத்தோம்.

அன்று காலை நாம் எல்லோருமாக காலை உணவருந்திக் கொண்டிருக்கின்றோம். வெளியில் இருந்து வந்த அனபு தானும் எம்முடன் சாப்பிடுவதற்காக எம்முடன் பாயில் இருந்து சாப்பிடத் தொடங்குகின்றான். அவனுடைய பார்சலில் ஒரு வடை இருந்ததைக் கண்ட நண்பன் அதை பாய்ந்து எடுத்தான். அன்பான பறிபாடு, அன்பான ஒப்பந்தம், அன்பான பங்கிடல் மூலம் வடையை பங்கிட்டுக் கொண்டு மிக சந்தோசமாக, குதூகலமாக உணவருந்திக் கொண்டிருந்தார்கள். கீழே பாயிலிருந்து சாப்பிடுவதால் தான் இடுப்பில் அணிந்திருந்த கைக்குண்டை அன்பு வெளியில் எடுக்கும்போது கைக்குண்டின் தடை நீக்கப்பட்டுவிட்டது. அன்புவின் முகம் மாறுகின்றது. கைக்குண்டை உடனே வெளியே எறியவேண்டும். வெளியிலும் தோழர்கள் அமர்ந்திருந்தனர். உடனே தன்னுடைய வயிற்றோடு குண்டை அணைத்துக்கொண்டான். வெடியதிர்வுகளோ, அல்லது குண்டுச் சிதறல்களோ மற்றைய தோழர்களை பாதிக்கவிடாமல் அவை அனைத்தையும் தன் உடலால் ஏற்றுக்கொண்டான்.

"டமார்" என்ற பெரிய சத்தம். புகைமண்டலம். நாம் தூக்கி வீசப்பட்டோம். புகை விலகியபோது "ஓ... கோரம்..." அறை எங்கும் இரத்த வெள்ளம். அறைகளில் எல்லாம் சதைத் துண்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கைக்குண்டால் துண்டாடப்பட்ட உடலின் பாகங்கள், மூன்று துண்டங்களாக்கப்பட்ட உடல்..... எம்மை எல்லாம் காப்பதற்காக தன்னுடைய உடலால் வெடிகுண்டைத் தாங்கிய அன்பு, துண்டுகளாகக் காணப்பட்டான்.

எம்மோடு பேசிக்கொண்டிருந்தவன், சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், திடீரென்று துண்டுகளாகக் கிடக்கும் போது எப்படித்தான் எம்மால் ஜீரணித்துக் கொள்ளமுடியும்.

உடலை அகற்றும் போது அன்புவின் டயறியின் பாகங்கள் இரத்தத்தில் தோய்ந்து காணப்பட்டது.

அதில் ஒருபக்கத்தில் "மரணம் ஒருவனை அழிப்பதில்லை" என்ற வசனம் காணப்பட்டது. ஆம் அன்புவின் மரணம், தியாகம் இன்னும் எத்தனையோ அன்புக்களை உருவாக்கியிருக்கின்றது. * *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீரி

**செ.பொ. சிவனேசு**

அனேகமாக இரண்டு கைக்குண்டுகளை வைத்திருப்பாள். வாகாய் எறிவதில் வலு சூட்டிகை. விசாரித்தால்,

"தாக்குதல்களில் என்ர பங்குக்குப் போதுமானதெண்டு நினைக்கிறன்."

"அவங்கள் தங்கட படைப்பலத்தை பெருக்கிறாங்களெல்லே? புது புது ஆயுதங்கள், கனரக வாகனங்களெல்லாம் வாங்கிறாங்கள்!"

"உண்மைதான். நாங்களும் எங்கடை போர்த்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கு. தவிர்கேலாது. எங்களுக்கு ஆயுதம் குறியில்ல - வழி. அவ்வளவுதான்."

மக்களுள் இறங்குவதெனில் ஆர்வக்குதிப்பு.

"மக்களுக்கெல்லாம் அரசியல் விழிப்பை ஊட்டவேண்டும். அவேன்ரை வாழ்க்கை முறைகளைத் தெரிஞ்சுகொள்ள வேணும். அதில் படிக்கிறதுக்கு நிறைய இருக்கு."

முன்னேறத்தான் முயற்சிக் கட்டுமே எதிரிப்படை? அதே தீவிரம். சீற்றத்தை எதிரிப்படையினருக்கு உணர்த்தியே சாகும் கைக்குண்டுகள்.

நோக்கு.... நீண்ட நெடியது, அகன்று பரந்தது. உள்ளார்ந்தத்தே கனல்....

"என்ன பாடுபடுதுகள் எங்கட சனங்கள்! வீடுவாசல்களை விட்டு, உடமையளை இழந்து.... உவங்களைக் கெதியாக் கலைக்க வேணும்; மிச்ச நிலங்களையும் மீட்கவேணும்?"

* * *

சமர்க்களத்தே சாதாரணந்தான். நொடிப்பொழுது அதிர்ந்து போகாமலும் இயலவில்லை. அவளுக்கு இப்படியே நடக்க வேணும்!

பாரிய தளமொன்றின் மீதான கடுந்தாக்குதல்; கடுஞ்சமர். முதன்மைக் காவலரண்களிடம் முன்னேறும் வாய்ப்பு. முன்னேறினாள்-நீளவாட்டாய், முகக்குப்பற, முழங்கைகளின் பக்கவாட்டுக்களைப் பதித்து நகர்கையில்..... நாசமாய்ப் போவான்களின் மிதிவெடி.....

அண்ணன் அதிரடித்தான் வீட்டை; அடைபட்ட தொண்டை திணறிக் கமறியது.

"அம்மா...! சின்னத் தங்கைச் சிக்கு.... கை ரண்டும்.... எடுத்தாச்சாமெண!..."

"ஐயோ.... என்ர குஞ்சு!...."

அடுக்களைக்குள்ளிருந்து பறந்து வந்து கதறல்; பின்தொடர்ந்து நெஞ்சிலடித்தபடி ஓடி வந்தாள். குலைந்து விழப்பார்த்தாள். தலைவாசற்க் கதவை, நிலையைப் பிடித்தாள்.

முற்றம் தெரியவில்லை. ஊர்,

"எப்பவாம்?" "எங்கயாம்?"

"என்னெண்டாம்?"

அவசரமாய் மிதிவண்டியை எடுத்தான். உடுத்திருந்த சேலை உடுத்தபடி. பதறினாலும் தொற்றினாள். தோற்பொருக்குகள் வெடித்த மிதிவண்டி. முதுமை. தளர்வாய் முனகியது.

மூச்சைப்பிடித்து முடுக்கினான். பொது மருத்துவமனை நோக்கிச் சக்கரக் குதிரைகள்.

எல்லோருக்கும் இல்லை அனுமதி. அம்மாவுக்கும் அண்ணனுக்கும் தெரியவந்தது இரண்டு நாட்களின் பின். கட்டிலில் பார்க்க முடிந்தது. நினைவு திரும்பாத நிலை. பேச வகையில்லை. இரண்டு மூட்டுக்களிலும் நீட்டி நின்றது முழங்கைவரை கட்டுத்துணி வெண்மை செம்மையுட் தன்னையிழந்து.... தேசியக் கொடியின் பிம்பத்தைப் பிரதிபலித்தது.....

மருத்துவமனை, ஓலமிடும் தொந்தரவுகளுக்கெல்லாந் தடை. தன்னையும் அடக்கமாட்டாது அம்மாவையும் அடக்கவெனத் திணறினான்.

* * *

ஆழ்மனத்துள் வேதனை வேர் காய்ந்துவிடவில்லை. எளிதல்ல. உணர்வுகளைப் பட்டென்று கொட்டிவிடுகிற மேல் மனம் ஆறிவிட்டது. மீளவும் பார்க்கச் சென்றனர். வழியிடை சொன்னான்;

"அங்கை வந்து அழுது கொண்டு நில்லாதையணை அம்மா. ஏற்கனவே அது மனம் நொந்து போய் இருக்கும். நீங்களும் கூட்டிப் போடாதேங்கோ! கூடிய அளவுக்கு ஆறுதல் சொல்லித் தேத்தப் பாருங்கோ."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்வது தளத்திற்கு. தன் தளத்திற்கே போயிருந்தாள்; வீடு செல்ல வன்மையான மறுப்பு.

"எனக்கு வேலை வீட்டிலை இல்லை. தளத்திலயும், களத்திலயுந்தான்."

அசைக்கவியலாப் பிடிவாதம்.

* * *

அசந்தே போனாள் அம்மா. தளத்துள் வைத்த முதலடியோடே உறைந்தாள். அண்ணனுந்தான். வாயிற் தூரிகை; ஓவியம் வரைந்து கொண்டிருந்தாள்.

சில நொடிப்பொழுது. தோழி ஒருத்தி அம்மாவை அணுகினாள்; கவனிக்க வைத்தாள்.

"இதென்னம்மா அதிசயம்? இப்ப அவ காலால பேனை பிடிச்சு எழுதவும் பழகுறா தெரியுமே?"

திறம் ஓவியம். வானம்; கருமுகிற் திரள்கள்; ஊடுருவியபடி ஒரு பறவை.

சின்ன வயசிலேயே கெட்டிக்காரி. ஆரம்பப் பள்ளிக் காலத்திலேயே நல்ல ஆர்வம். அநேகமாய் வரைந்த படியேதான். ஒரு வட்டம், ஒரு நேர்கோடு, வட்டத்தின் சற்றுக் கீழே நேர் கோட்டிலிருந்து இருபுறமும் சத்தாராய் இரு சிறிய கோடுகள். இவ்விதம் அடிமுடிவிலும் இரண்டு. எழுதிக்கொள்வாள்; 'அம்மா'. அப்பாவுக்கு இன்னொன்று. முதிர் பார்வையில், விளக்குமாற்றுத் தடிக்குப் பனங் கோம்பை கொழுவியது போல. எட்டாம் வகுப்பளவில் நன்றாகவே வரைந்தாள். ஆசிரியர் அவள் கைகளை.... அந்த இரு கரங்களை.... கண்களில் ஒற்றத் தூண்டுகிற அளவுக்கு வரைந்து காட்டினாள்.

ஓவியத்திலிருந்து இன்னும் தன் கண்களைப் பிடுங்கிக் கொள்ளவில்லை அண்ணன். என்ன இது? பறவைக்குச் சிறகுகளைக் காணேல்ல?.... ஆனா, வேகமாய் பறக்கிற மாதிரி இருக்கு....து ...இதென்னெண்டு...? எண்டாலுஞ்.... சிறகு....

ஏதோவித இயல்பூக்கம்; அவன் வசமின்றியே.

"சிறகுகளைக் கீறேல்...."

திடுதிடுப்பாய்த் தன்னுணர்வு; அந்தரங்கமாய் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

திரும்பியவள் புரிந்து கொண்டாள். அண்மித்தாள்.

"எட, எப்ப வந்தனீங்கள்....

அம்மா என்ன பேசாமல் நிக்கிறியள்...."

ஓவியத்தைப் பார்த்தாள்.

"....இந்தப் படம் இப்படித்தான் அண்ணை. பறவைக்குச் சிறகுகள் இருக்காது. தலையங்கம் என்ன தெரியுமே?.... நம்பிக்கை."

* * *

கொடுக்கத்தான் வந்தவர்கள் பெற்றார்கள். ஆறுதல் வார்த்தைகள், தேறுதல் மொழிகள், அவர்களுக்கு அவள்.

"அம்பது லச்சம் வெச்சிருக்கிறவன் ரண்டு ரூபா துலைஞ்சாக் கவலைப்படுவானே? ஒரு நட்டமுமில்லை. போனது ரண்டு கைதான். இன்னும் அம்பது லச்சம் கையள் இருக்கு!"

திரும்புகிற வழியிடை பேச்சு மூச்சில்லை. திகைப்பு, அதிசயம், மெல்ல மெல்லப் பெருமிதம்.

தூ.... என்ன நெஞ்சுரம்! என்ன சர்வ சாதாரணமாகக் கதைக்கிறாள்!.... என்ன துணிச்சலப்பா! முந்திச் சின்னக் காயமெண்டாக் காணும்.... குழறலோ?.... காலிலை சின்னக் கல்லடிச்சா வீடே தலைகீழாப் போம்..... இப்ப?... எல்லாம் வளக்கிற வளப்பில தான்.... கீறுறது, எழுதுறது சரி. மற்றப் பிளையளிட்டை இப்பிடியுமெல்லே அடிக்கடி கேக்குதாம்:

"கை பொருத்தினா குண்டெறியக் கூடியதாப் பழகலாமே?"

## மேஜர் பாரதி



**சாவா? நாம்
சந்திப்போம்.
வாழ்க்கை எமக்கென்ன
பூவா? நாம்
போராடுவோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகளிர் அமைப்புப் பற்றிய

## கேள்வியும் – பதிலும்



**□ விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவு, மகளிர் அமைப்பு என்பன எப்போது உருவாக்கப்பட்டன?**

■ 1984 இன் இறுதிப்பகுதியில் இவ்விரண்டு அமைப்புக்களும் உருவாக்கப்பட்டுவிட்டன.

ஆனாலும் நாங்கள் 1989 இலிருந்துதான் ஒரு தனித்துவம் மிக்க மகளிர் படையணியாக உருவாக்கப்பட்டு, இராணுவக் கட்டமைப்புடன் செயற்படத் தொடங்கினோம். அத்துடன் அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்காக விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியாகவும் செயற்படத் தொடங்கினோம். விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி இப்போது விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**□ தமிழீழ விடுதலையினை வென்றெடுக்குமுகமாகத் தமிழீழப் பெண்கள் மத்தியில் மகளிர் அமைப்பானது முன்வைத்திருக்கும் வேலைத்திட்டங்களைப் பற்றிச் சிறிது கூறுக.?**

■ தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதில் தமிழீழப் பெண்களின் பங்கு முக்கியமானது. தேசவிடுதலையை மீட்டெடுக்கப் புறப்பட்ட பெண்கள் முதலில் சமூக ஒடுக்குமுறையை உடைத்தெறியவேண்டும். தளைகளை நீக்குவதற்காகப் பெண்கள் தமது கால்களில் நிற்கவேண்டும். இந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வுத் திட்டம், சுய பொருளாதாரத் திட்டம் என்ற அடிப்படையில் பெண்களுக்கான வேலைத்திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றோம்.

**□ மகளிர் அமைப்பின் செயற்பாடுகளுக்குத் தமிழ்ப் பெண்கள் மத்தியில் ஆதரவு உள்ளதா? நகர்ப்புறப் பெண்களா, அல்லது கிராமப்புறப் பெண்களா அதிக அளவில் ஆதரவை வழங்குகின்றார்கள்?**

■ தமிழீழப் பெண்களை நாம் நகர்ப்புறம், கிராமப்புறம் எனப் பிரித்து வைக்கவில்லை. ஒரு பெண், அதுவும் ஒரு தமிழ்ப்பெண் தேசிய ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒடுக்கப்படுகிறாள். இந்த அடிப்படையில் இரண்டு ஒடுக்குமுறை வடிவங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கு எதிராகவும் போராட வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்திலும், இந்த அடக்குமுறைகளை உடைக்கும் விதத்திலும் தமது சொந்தப் பலத்தில் அவர்கள் வாழ்வதற்கேற்ற விதத்திலும் எமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறோம். அதனால் நகரம், கிராமம் என்ற பேதமில்லாமல் எம்முடன் பெண்கள் இணைந்து நிற்கிறார்கள்.

**□ பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் இல்லையென்றும், இது ஆண்களில் மன மாற்றத்தை ஏற்படுத்துவதே எனத் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தலைவர் குறிப்பிட்ட ஆண்களுக்கான மன மாற்றத்தை ஏற்படுத்துவற்கு ஏதேனும் திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா?**

■ இன்று போர்க்களத்தில் ஆண்களுடன் இணைந்து, சம



மாக நின்றுதான் போராடிக் கொண்டிருக்கிறோம். ஒரே களத்தில் ஒவ்வொருவருமே, ஒவ்வொருவரின் கஸ்டங்களை மட்டுமல்ல, திறமைகளைத், தியாகங்களை நேரடியாகவே காண்கிறோம். எழுத்துக்களால் அல்லாமல் செயல்களினூடாகவே ஒருவரையொருவர் புரிந்துகொண்டிருக்கிறோம். இது பலவந்தமாக அல்லாமல், இயல்பாகவே ஆண்களின் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

**□ பழையகால மூட நம்பிக்கைகள், சமயக் கோட்பாடுகள், பாலியல் அடிப்படையான வேறுபாடுகள் போன்றவற்றிலிருந்து பெண்களை விடுவித்து,**



**ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மகளிர் அமைப்பு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது?**

■ காலங்காலமாகச் சமயக் கோட்பாடுகளுக்குள் ஊறிப் போய் விட்டவர்களை திடீரென அதிலிருந்து விடுவிக்க வேண்டுமானால் முதலில் அவற்றை அப்படியே பிழை என்று சொல்லிவிடமுடியாது. அவற்றைப்பற்றிய உண்மைகளை எழுத்துக்களூடாகவும், பெண்களுடனான கலந்துரையாடல்களினூடாகவும் விளக்கி வருகின்றோம்.

**□ பல்வேறு காரணங்களால் சமூகக் குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களைக் கண்டறிந்து அவர்களது பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்படுகின்றதா?**

■ சமூகக் குற்றவியல் செயல்களில் ஈடுபடும் பெண்களை எங்கள் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருகிறோம். அவர்களின் வாழ்க்கை நிலைகளை முழுவதுமாக ஆராய்கிறோம். அனுதாபத்தோடு அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை அணுகுகின்றோம். அவர்கள் அந்த வழியைத் தேர்ந்தெடுத்தது குற்றம் என்பதை உணர்த்துவதற்காக எமது சமூகச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீர்திருத்தப் பண்ணையில் தண்டனை கொடுக்கப்படும் அதேவேளை, அவர்கள் பண்ணையை விட்டு வெளியேறும் போது தமது கால்களில் நின்று வாழ்க்கையைத் தொடரும் விதத்தில், சுய தொழிலுக்கான ஆரம்ப முதலீட்டைக் கடன் அடிப்படையில் வழங்குகிறோம்.

**□ இன்று எமது சமூகத்தில் சீதனக் கொடுமை பெரும் தாண்டவமாடுகிறது என்பது வெளிப்படை. மகளிர்பிரிவு இதனை ஒழிப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்கின்றதா?**

■ எங்களின் சமுதாயத்தில் பெண்களின் வாழ்வைச் சீரழித்து வருவதில் முக்கியமானது சீதனம். இந்தக் கொடுமையிலிருந்து பெண்களை மீட்க வேண்டும் என்ற நோக்கில் சீதனத் தடைச் சட்டத்தை கொண்டுவர இருக்கிறோம். அதனைச் சரியான முறையில் அமுல்படுத்த வேண்டும் என்பதற்காக மக்கள் மத்தியில் இறங்கி சீதன ஆய்வொன்றை நடாத்தியுள்ளோம். இது சரியான முறையில் பரிசீலிக்கப்பட்ட பின் சீதனத் தடைச்சட்டம் அமுல்ப்படுத்தப்படும்.

**□ இன்று தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் இணைந்து எல்லாத் துறைகளிலும் முன்னிற்பதால் தமிழர்களது பண்பாடுகள் பாதிக்கப்படுகின்றன எனச் சிலர் கருதுகிறார்களே, இவர்களுக்கு நீங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள்?**

■ பண்பாடு என்று எதனைக் கருதுகின்றோம்? எமது இனத்தை, நாட்டை அழிக்க அன்னியன் வரும்போது, 'பெண்கள் நாம் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும்' என்று இருந்தால் இனம் அழிந்துவிடும். ஒரு இனத்தின் தேசியத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றான பண்பாடு, அந்த இனமே அழிந்த பின் என்ன செய்வது?



அத்துடன் இயக்கத்தில் பெண்கள் இணைந்ததால் பண்பாட்டுச் சீரழிவு எதுவும் நடக்கவில்லை. பண்பாடு காக்க பண்போடு தான் போராடுகின்றோம்.

**□ பல்வேறு நாடுகளிலும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களிலும், புரட்சிகளிலும் அவ்வவ் நாட்டுப் பெண்கள் பங்குபற்றியிருப்பதாக நூல்களில் படித்துள்ளோம். இந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களது பங்களிப்பைப் பற்றிக் கூறமுடியுமா?**

■ ஏனைய நாட்டு விடுதலைப் போராட்டங்களைப் பொறுத்தவரை பெண்களின் பங்களிப்பு, போராட்டத்தில் ஈடுபடும் ஆண்களுக்கு உதவி செய்தல் என்ற வடிவத்திலேயே பெரும்பாலும் இருந்தது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை நாம் தனித்த ஒரு படைப்பிரிவாக, ஆண் போராளிகளுக்குச் சமமாக நின்று போராடுகின்றோம். போர்க்களத்தில் மட்டுமல்ல, அரசியல் ரீதியான வேலைகளிலும் தனித்து நின்று நிர்வாகம் செய்கின்றோம்.

**□ இன்றைய யுத்த காலகட்டங்களில் பாதிப்படையும், இன்னலுறும் மக்களுக்கு உதவுவதற்கு சமூகத்திலுள்ள ஏனைய பெண்களை மகளிர் பிரிவு எவ்வகையில் அணிதிரட்டுகின்றது?**

■ அதிதீவிரமாகப் போர் நடக்கும் காலங்களில் காயப்படும் பெண் போராளிகளைப் பராமரிக்க வருமாறு பெண்களைக் கேட்கின்றோம். அவ்வாறு வந்து பராமரிக்கும் போது அவர்கள் இயல்பாகவே போராட்டத்தின் தன்மைகளை, போராளிகளின் கஷ்டங்களை, துன்பங்களை, உறுதியை எல்லாம் புரிந்து கொள்கிறார்கள். இந்த ரீதியில் வரும் பெண்களை ஒன்றிணைத்துச் சமூக வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்துகிறோம். இடம் பெயர்ந்தோர் தங்கியிருக்கும் முகாம்களுக்குச் சென்று, அவர்களுக்கான உணவு, உடை சேகரித்துக் கொடுத்தல், நோய்த் தடுப்பு மருந்துகள் கொடுத்தல், சுகாதார சம்பந்தமான வேலைகளைச் செய்து கொடுத்தல் போன்ற வேலைகளை இந்தப் பெண்கள் செய்கிறார்கள்.

இதனை விட போராளிகளின் காவலரண்களில் பதுங்கு குழிகளை வெட்டும் வேலைக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளையும் இவர்கள் செய்கிறார்கள்.

**□ சர்வதேச ரீதியாக இயங்கும் மகளிர் அமைப்புகள், வெளிநாடுகளிலுள்ள தமிழ் பெண்கள் இவர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் கருத்துக்கள் என்ன ?**

■ இங்கிருந்து வெளிநாட்டுக்குச் சென்றவுடன், அங்கு தொழில் செய்யத் தொடங்கியவுடன் தம்மீது திணிக்கப்பட்டுள்ள அடக்குமுறைகள் அனைத்தையும் உடைத்துவிட்டதாகப் பல பெண்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறானது. அவர்கள் தம் மனங்களுக்குள் சிறைபட்டுக் கிடக்கிறார்கள். அந்தச் சிறை உடைய வேண்டும். அப்போதுதான் பெண் விடுதலை நிச்சயப்படுத்தப்படும். வெளிநாட்டுக்குப் போனாலும், இங்கு எந்தச் சமூக விழுமியங்கள் அவர்கள் வாழ்வைத் தாங்கியதோ, அதே விழுமியங்கள் தான் அங்கும் அவர்கள் வாழ்வை நடத்துகின்றன. இங்குள்ள மதக் கோட்பாடுகள், மூடப் பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் அத்தனையையும் அந்த நாட்டிலும் கடைப்பிடிக்கின்றார்கள். பின் எப்படி அவர்கள் விடுதலை பெற முடியும்?

தமிழீழப் பெண்களாகிய நாம் தேசிய ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அடக்கி ஒடுக்கப்படுகின்றோம். இந்த அடக்குமுறைகளைத் தகர்த்தெறியும் எமது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக இந்த சர்வதேச மகளிர் அமைப்புக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்பாக்கிறோம். ■




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமகாலக் கண்ணோட்டம்

**வெ**ளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களின் தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது. திருமணத்துக்காக மட்டும் அனுப்பப்படும் பெண்களின் நிலைப்பாட்டை மட்டும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

பெண்கள் தமக்கு கணவனாக வர இருப்பவனின் உருவம், குண இயல்பு, பெயர், ஊர் எதுவுமே தெரியாமல் அவர்களைத் திருமணம் செய்த ஒரு காலம் இருந்தது. அதனைப் பழைய காலம் என்பர் பலர். நாகரிகம் வளர்ச்சியுறாத காலம் என்பர் இன்னும் சிலர். அதேகாலம் மீண்டும் நவீனமயப்படுத்தப்பட்டு வந்துள்ளதோ என்று எண்ணவைக்கின்ற ஒரு நிகழ்வுதான் சிறிது காலமாகப் பெண்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவதாகும்.

இவ்வாறு அனுப்பப்படும் பெண்களின் மன உணர்வுகளைப் பற்றி எவருக்குமே அக்கறையில்லை. 'மாப்பிள்ளை கிடைத்துவிட்டாரே அதுவே போதும்' இந்தத் திருப்தியுடன் பெற்றோர் மகளை வெளிநாட்டுக்கு அனுப்பத் துடிக்கின்றார்கள். வீட்டுக்குள்ளேயே வாழ்ந்தவள் வெளியுலகத்தைத் தரிசிக்கும் போது எவ்வளவு சிக்கல்களுக்கு ஆவாள், எத்துணை அச்சம் அவள் மனதைக் கவ்விப்பிடித்திருக்கும் என்பதைப்பற்றியும் எவரும் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை.

நியாயத்தை எடுத்துச் சொல்லும் துணிவு இல்லாதவர்களாக, தமது எண்ணங்களையே வெளிப்படுத்தும் வலுவில்லாதவர்களாகவே வாழ்ந்து பழக்கப்பட்ட பெண்கள் தமது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் உரிமையை இழந்து வாழ்கின்ற நிலையைக் கூட ஊமையாக சீரணித்துக் கொண்டு வாழ்கின்றார்கள். பல பெண்கள் இந்த நாட்டிலேயே இந்த நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் வேற்றுநாட்டுக்கு அனுப்பப்பட்டு இதே நிலையை விட இன்னும் கொடுமையான வாழ்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த அவலத்தின் ஓர் வெளிப்பாட்டைத்தான் அண்மையில் பத்திரிகையில் வந்த செய்தி ஒன்று புலப்படுத்தி நிற்கின்றது. சுவிசுக்குப் போவதற்காக, சிங்கப்பூரில் தங்கியிருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த யுவதி ஒருவர், தாம் தங்கியிருந்த அறையிலேயே இறந்துகிடக்கக் காணப்பட்டார். இந்தச் செய்தியூடாக வெளிநாட்டுக்குத் திருமணத்துக்காகத் தனித்து அனுப்பப்படும்



**பெ**ண் ஒடுக்குமுறை என்பது யுகம் யுகமாக எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாடுகளிலும் நிலவிவந்த ஒரு சமூக அநீதி. இந்த சமூக அநீதி இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்றுவிடவில்லை.

பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது, சமூக, பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும், அதேவேளை, ஆண் பெண் உறவிலும், அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண் பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில்தான் சாத்தியமாகிறது.

எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண்விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் குறிக்கோள்களில் ஒன்றாக வரித்துக்கொண்டு செயற்பட்டுவருகின்றது.

- தலைவர் திரு. வே. பிரபாகரன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களின் சோகக்கதையை எல்லோருமே புரிந்துகொள்ள லாம். இந்தச் செய்தி தனித்து அனுப்பப்பட்ட ஒரு பெண்ணுக்கு நடந்த பரிதாபத் தைச் சொல்லுகின்றது. இந்தப் பெண் தன்னைத்தான் அழித் துக்கொண்டாள். ஆனால் சொல்லவும் முடியாமல், மெல்லவும் இயலாமல், வாழ வும் முடியாமல், சாகவும் முடி யாமல் வெளிநாட்டில் பல தமிழ்ப் பெண்கள் தமது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

வீட்டுக்குள்ளேயே வைத்து வளர்க்கப்பட்ட பெண் திடீ ரென்று வெளிநாட்டுக்கு முன்பின் தெரியாத ஒருவனி டம் அனுப்பப்படுகிறாள். இந்த நிலையில் அந்தப் பெண் அனுபவிக்கின்ற உள்பாதிப்புக் களைப் பற்றி எவருமே அக்க றைகொள்வதில்லை.

பெரும்பாலான பெண்க ளின் சிந்தனையோட்டங்கள் அவளின் குடும்பத்தைச் சுற்றி யதாகவே உள்ளது. அதற்கப் பால் அவர்களின் எண்ணங் கள் பரந்து செல்லவில்லை. இதற்கு முக்கிய காரணமாக அமைவது ஒரு பெண் வளர் க்கப்படும் முறையாகும். அவள் எப்படி வளர்க்கப்பட வேண்டும் என்று சமூகம் நிர்ப்பந்திக்கின்றதோ, அதற் கேற்பவே வளர்க்கப்படுகின் றாள்.

இவ்வாறான சூழநிலையில் வளர்ந்த பெண் திடீரென்று வெளிநாட்டுக்குத் தனித்து அனுப்பப்படுகின்றாள். இவ்வாறு செல்லும்போது தனித்த உணர்வு, அச்சம் போன்ற பலவித உணர்வுக ளால் தாக்கப்படுகின்றாள்.

எந்தவிதப் பிரச்சினைகளை யும் எதிர்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலையில் வளர்க்கப்படாத பெண் திடீரென்று இவைக ளுக்கும் அப்பால் பல பிரச்சி னைகளைச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் தனித்துவிடப் பட்ட நிலையில் நிலைகலங்கி விடுகிறாள். அதனால்தான் இவ்வாறான அவலநிலைக்கு பெண்கள் தள்ளப்படுகின்றார் கள்.

பெண்களின் இத்துயரங்க ளுக்குக் காரணமாக உள்ள சமூக மனப்பாங்கு தானாக மாறாது. மாற்றப்படவேண்டும். இந்தமாற்றத்தைச் செய்யவேண் டிய பெரிய பொறுப்பு பெண்களின் கைகளில்தான் உள்ளது.

அறியாமை இருளிலிருந்து பெண்கள் விடுபடும் போது தான் இந்த அழுத்தங்களிலி ருந்து மீளமுடியும். ஆடவனின் தேவைக்காக உருவாக்கப்பட்ட சடப்பொருளாக மட்டுமே தாம் கணிக்கப்படுகின்றோம் என்பதை ஒவ்வொரு பெண்ணும் புரிந்துகொண் டால்தான் 'ஆற்றலும் அறிவு மில்லாதவர்கள்தான் பெண்கள்' என்று சொல்லிச் சொல்லியே வளர்க்கின்ற சமூக எண்ண ஓட்டத்தை மாற்றமுடி யும்.

'பெண்கள் அறிவிலிகள்' என்ற அர்த்தமற்ற போலித்தன மான தத்துவங்கள் யாவும் உடைக்கப்பட்டு வரும் சமூகத் தில்தான் வாழ்ந்துகொண்டி ருக்கிறோம் என்பதை தமிழீழத் தில் வாழும் ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்டால்தான் இந்த 'பேரப்பொருள் வாழ்நிலை'யிலிருந்து பெண்க ளுக்கு விடுதலை கிடைக்கும்.



## இலட்சியக் கனல் சுமந்து

எப்போது எமது மண்ணில் கால்வைப்பேன் என்று ஒவ்வொரு கணமும் ஏங்கிக்கொண்டிருக்கிறேன். எனது தாயகத்திலே எங்கா வது ஒரு மூலையிலேனும் என்ன வேலையாவது செய்துகொண்டிருந்தாலே, அது மனதுக்கு முழு அமை தியைக் கொடுக்கக்கூடியது.

எமக்கென்று ஒரு சுதந்திர நாடு அமையும்போதுதான் ஒவ்வொரு தமிழனும் தலை நிமிர்ந்து வாழமுடியும். என்னால் வெளிநாடுகளில் வாழமுடியவில்லை. எனது சுபாவம் அப்படி. இப்போ துதான் புரிகிறது, நாம் எம் மக்களையும் மண்ணையும் எவ்வளவு தூரம் நேசிக்கின் றோம் என்பது. இன்னும் எத்தனை பிறவி எடுத்தா லும் எனது மக்களுக்கும், மண்ணுக்கும் சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைக்கவேண்டும். நாம் எமது மண்ணின் ஒவ்வொரு அடி நிலத்துக் கும் போரிட்டவர்கள். ஒவ்வொரு வீட்டைப் பிடிப்ப தற்கும் போரிட்டவர்கள். எப்படி எம் மண்ணைப் பிரிந்து வாழமுடியும்?

- கேணல் கிட்டு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**1979**ம் ஆண்டு தொடக்கத்தில் கிட்டு தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்டபோது இயக்கத்தில் சில பத்து உறுப்பினர்கள்தான் இருந்தனர். சதாசிவம் கிருஷ்ணகுமாராக இயக்கத்தில் இணைந்தவடுகள் பற்றி, இயக்க வீரர்கள் செயற்படுவது எப்படி என்பது பற்றி, அரசியல் பற்றி, மக்களோடு பழகுவது பற்றி, உலக விடுதலை இயக்கங்கள், விடுதலைப் போராட்டங்கள் பற்றி எல்லாம் தலைவரின் அறிவுரை எதையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேரார்வம், சொல்பவற்றை எளிதில் உடனடியாகப் புரிந்துகொள்ளும் தன்மை, அச்சம் சிறிதுமற்ற தன்மை, எடுத்த செயலை நிறைவாக முடிக்கும் தன்மை



# தளபதி கிட்டு: ஒரு கண்ணோட்டம்

னுக்குத் தொடக்கத்தில் வெங்கிட்டு எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆயினும் கிட்டு என்றே இயக்கத் தோழர்கள் அழைத்ததால் கிட்டு என்ற பெயரே அவனுக்கு நிலைத்துவிட்டது. துடிப்பு மிக்க இளைஞனான கிட்டு, இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் நேரடியாக ஆயுதப் பயிற்சி பெற்ற வீரர்களில் ஒருவன். அது மட்டுமன்றி, இயக்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாகள், எண்ணங்களை நிறையப் பெறும் வாய்ப்பையும் கிட்டு பெற்றிருந்தான்.



போன்ற அவனிடம் இயல்பாகவே இருந்த இயக்க வீரனொருவனுக்கு வேண்டிய திறமைகளை தலைவர் பிரபாகரன் அவர்கள் நன்கு அறிந்துகொண்டார்.

தலைவர் பிரப்பாகரன் மீது பெருமதிப்பும், பேரன்பும், இயக்கத்தின் கொள்கை செயற்பாடுகளில் நிறைவான தெளிவும் பெற்றிருந்த 19 வயது இளைஞனான கிட்டுவிடம், துடிப்பான இளைஞர்களிடம் இயல்பாகவே இருக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சகலகலாவல்லவன்



# சாதனை வீரன்

குறும்புத்தனமும் இருந்தது. 1979ல் தலைவர் பிரபாகரன் அவர்கள் இயக்கப்பணியின் பொருட்டு தமிழகம் சென்றிருந்த வேளையில் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்த கணேசனால் (ஐயரால்) இயக்க உறுப்பினர் ஒருவனுக்கு அடித்துவிட்டான் என்பதற்காகக் கிட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

தமிழகத்திலிருந்து திரும்பி வந்த தலைவர் பிரபாகரன் அவர்கள் கிட்டுவின் ஆற்றல்கள், திறமைகள், இயல்புகளை நன்றாக அறிந்து வைத்திருந்ததால் உடனடியாகக் கிட்டுவை அழைத்து மீண்டும் இயக்கத்தில் இணைத்துக்கொண்டார்.

தலைவர் அவர்கள் கிட்டுவின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் வீண்போகவில்லை. 1981 நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு, தலைமறைவாகித் தமிழகம் சென்று 82ல் திரும்பிய கிட்டு, 1983 பங்குனி 4ம் நாள் அற்புதன் தலைமையில் இயக்கம் மேற்கொண்ட உமையாள்புரம் தாக்குதலின் போது தன் தனி ஆற்றலைக் காண்பித்து தலைவரினதும், இயக்க வீரர்களினதும் பெருமதிப்பைப் பெற்றான்.

அதையடுத்து, 1983 சித்திரை 7ம் நாள் கிட்டு இயக்கத்தின் தாக்குதல் குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக தலைவர் பிரபாகரன் அவர்களால் அமர்த்தப்பட்டான்.

அதன்பின் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பகிஷ்கரிப்பின் போது கந்தர்மடம் வாக்குச் சாவடியில் இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதல், ஆடி 23ல் திருநெல்வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லியில் இராணுவ வண்டிகள் மீதான தாக்குதல் போன்றவற்றில் கிட்டு தன் தனி ஆற்றலைக் காட்டினான்.

1983 பிற்பகுதியில் இந்திய அரசு வழங்கிய பயிற்சி பெறச் சென்ற இயக்கத்தின் முதற் குழுவுக்கு இரண்டாவது பொறுப்பாளராக தலைவர் பிரபாகரன் அவர்களால் அமர்த்தப்பட்டான். அந்தப் பயிற்சியின் போது ஆயுதங்களைக் கையாள்வதில் கிட்டு காட்டிய துரிதமும், திறமையும் இந்திய பயிற்சியாளர்களை வியக்கவைத்தது.

பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 24.02.84 அன்று யாழ். குருநகர் இராணுவமுகாமின் கட்டடங்களைத் தகர்த்ததுடன் இயக்கம் மேற்கொண்ட பல்வேறு தாக்குதல்களில் தன் திறமையையும், வீரத்தையும் காண்பித்தான். 1985ல் கப்டன் பண்டிதர் வீரச்சாவடைந்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத் தளபதியாகிய கிட்டு வடமாகாணத்திலேயே பெரிய பொலிஸ் நிலையமாகத் திகழ்ந்த யாழ். பொலிஸ் நிலையக் கட்டிடங்களைத் தகர்த்து, நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், ஆயிரக்கணக்கான ரவைகளையும், பல ஆவணங்களையும், கோப்புகளையும் கைப்பற்றி பொலிசாரை விரட்டியடித்தான்.

அதன்பின் தளபதி கிட்டு இராணுவ முகாம்களை முற்று கையிட்டு இடைவிடாது படிப்படியாக மேற்கொண்ட தாக்குதல்களினால் சிங்களப்படை முற்றாக முகாம்களுக்குள் முடக்கப்பட்டு யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் முழுக்கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. தளபதி கிட்டுவின் ஆற்றல், திறமை, உழைப்பு, எதற்கும் அஞ்சாத வீரம் என்பனவே, இன்று போலன்றி ஆள்வலு, ஆயுதவலு போன்ற வசதிகள் குன்றியிருந்த காலத்திலும் கூட அவன் பெரு வெற்றிகளைக் குவிக்கக் காரணமாக அமைந்தது. அக்காலத்தில் எதிரிகளின் பயங்கரவாதச் செயலை மட்டுமன்றி, இனத்துரோகிகளின் சதிச் செயல்களையும், சமூகவிரோதிகளின் அடாவடித்தனங்கள் போன்றவற்றையும் எதிர் கொண்டு ஈடுகொடுத்தான். தளபதி கிட்டு தன் அருஞ்சாதனைகளையும் படைத்தான்.

தளபதி கிட்டு தன் ஆற்றலையும் திறமையையும் இராணுவ நடவடிக்கைகளோடு நிறுத்திக் கொள்ளவில்லை. குடாநாட்டில் சிங்களக் காவல்துறை முற்றாகச் சீர்குலைக்கப்பட்டதையடுத்து, யாரும் கேட்பாரற்ற முறையில் பெருகிய சமூக விரோதச் செயல்களையும், சட்ட மீறல்களையும் தடுத்து நிறுத்த கிராமிய நீதிமன்றங்களை ஏற்படுத்தினான். சமூக ஒழுக்க மீறல்கள், பண்பாட்டுப் பிறழ்வுகள் என்பவற்றுக் கெதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டான். சிறிலங்கா அரசின் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததைத் தொடர்ந்து, சிறிலங்கா அரசு பொருளாதாரத் தடையை மேற்கொண்டதையடுத்து தளபதி கிட்டு, கிராமிய உற்பத்திக் குழுக்களை அமைத்து உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தான். இயக்கத்தினூடாகவும் சவர்க்காரத் தொழிற்சாலைகள், தும்புத் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளையும், விவசாயம், கோழி, கால்நடைப் பண்ணைகளையும், விற்பனை நிலையங்களையும், நியாயவிலைக் கடைகளையும் ஏற்படுத்தினான்.

போராட்ட சூழ்நிலையில் சிறுவர்கள், குழந்தைகளின் மன நிலை பாதிப்புறா வண்ணம் சிறுவர்களின் பொழுதுபோக்கிற்காக பல சிறுவர் பூங்காக்களை உருவாக்கினான். மக்கள் மனதில் விடுதலை

**"உலகத்தில் எந்த நாடும் எமது தாயகத்திற்கு இணையாக மாட்டாது."**

**- 03.06.1992**

*** * ***

**"அறிவும், வயதும், அநுபவமும், உயர்வும் கிடைக்கும் போது நாம் பணியவேண்டும். பணிவு என்பது உலகையும் மக்களையும் புரிந்து கொண்டு அவர்களுக்காக உழைத்தல் என்பதையே குறிக்கும்."**

**- 20.04.1992**

*** * ***

**"உன்னால் எவ்வளவு முடியுமோ அதற்கு மேலாக மற்றவர்களுக்கு உதவிசெய். சேவை என்பது கடமைதான். கடமையில் தவறாதே"**


**- 20.11.1991**

**- கிட்டு -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





> “நான் உல்லாச விரும்பி அல்ல. அது என் இயல்பு அல்ல. உல்லாசத்தை விரும்பினால் உல்லாசமாக இருக்கலாம். அது என்னால் முடியாது.”
>
> *- 10.10.1992*
>
> **- கிட்டு -**

உணர்வை விதைப்பதற்காக வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, நாடகம் எனப் பல கலைநிகழ்ச்சிகளை ஊக்குவித்தான். நிதர்சனம் தொலைக் காட்சி நிலையத்தின் மூலம் போராட்ட முனைக்கு நேரடியாக மக்களை அழைத்துச் சென்றான். சிறுவர்க்கான கலைநிகழ்ச்சிகள், கார்ட்டூன்கள் போன்றவற்றையும் ஒளிபரப்ப வைத்தான்.

இயக்க நடவடிக்கைகள் அனைத்திலும் வெற்றிகள் குவிக்கப்பட்ட வேளையில் விடுதலைப்புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவ வீரர்களை விடுவிக்க என பேச்சுவார்த்தை நடத்த வந்த சிங்கள அரசியல் தலைவர்களோடும், பௌத்த பிக்குகளோடும் உரையாடி பேச்சுவார்த்தை நடத்தி விடுதலைப்புலிகளின் நடவடிக்கையின் நியாயத்தை அவர்களுக்கு உணர்த்தி அனுப்பிவைத்தான்.

1986ம் ஆண்டு கார்த்திகை 10 ஆம் நாள் விடுதலைப்புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவத்தினர் இருவரைப் பார்ப்பதற்கும், அவர்களை விடுவிப்பது தொடர்பாகப் பேசுவதற்கும் என கொழும்பிலிருந்து வந்த கேணல் ஆனந்த வீரசேகரா, யாழ். கோட்டை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலை ஆகியோரை வரவழைத்து தனது இடத்தில் வைத்துச் சந்தித்து உரையாடி விடுதலைப் புலிகளின் நிலையை எடுத்துக் கூறி சிங்கள இராணுவ உயரதிகாரிகளுக்கு தான் சளைத்தவன் அல்ல என்பதை மெய்ப்பித்தான்.

1986 கார்த்திகையில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ்நாட்டில் இந்திய அரசுக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட போது இந்திய நயவஞ்சகச் செயலுக்கு எதிராக தமிழீழ மக்களை அணிதிரட்டி மிகப் பெரிய கண்டன ஊர்வலத்தையும், கண்டனப் பொதுக்கூட்டத்தையும் வரலாறு காணாத வகையில் எழுச்சியுடன் நடாத்திக் காட்டினான்.

இனத்துரோகிகளினதும், சமூக விரோதிகளினதும் அடாவடித்தனங்களை அடக்குவதில் முனைப்பாக நின்றதால் பல இடர்களை தளபதி கிட்டு எதிர்நோக்கவேண்டியிருந்தது.

1987 பங்குனி 23ம் நாள் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த யாழ். தொலைத்தொடர்பு நிலைய முகாம்மீது தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய ஒரு வாரத்தில் சமூகவிரோதக் கும்பல் மறைந்திருந்து மேற்கொண்ட குண்டுவீச்சில் தளபதி கிட்டு தனது இடது காலை இழந்தான். முடக்கப்படுவதற்கு முன்பும் முடக்கப்பட்ட பின்பும் அரசபடைகள் முகாம்களுக்குள் இருந்தபடி மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களினாலும், விமானக் குண்டுவீச்சாலும் வீடுகள், வியாபார நிலையங்கள் பாதிக்கப்பட்ட வேளைகளிலெல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லாம் தளபதி கிட்டு அந்த இடத்துக்கு விரைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவத் தவறுவதில்லை. அரசபடைகளின் பயங்கரங்களிலிருந்து மக்களைக் காத்த தளபதி கிட்டுவின் மீது மக்கள் தமது அன்பையும் பாசத்தையும் பொழிந்தனர்.

விமானக் குண்டு வீச்சுக்களையும், ஹெலிகொப்டரின் துப்பாக்கிச் சூட்டையும் பொருட்படுத்தாது 1987 ஆம் ஆண்டு மே நாளில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் காலிழந்த தளபதி கிட்டுவை முதற்தடவையாகப் பார்த்துவிட வேண்டும் என்னும் துடிப்பில் சிறுவர், பெண்கள், முதியோர், இளைஞர் என்ற வேறுபாடின்றி இலட்சக்கணக்கில் அணிதிரண்ட மக்கள் வெள்ளம் வெளிப்படுத்திய ஆவலும், துடிப்பும் மக்கள் தளபதி கிட்டுவின் மீது எத்தகைய ஆழமான மதிப்பை, அன்பை, பாசத்தை வைத்திருந்தனர் என்பதை எடுத்து விளக்குவதாக இருந்தது.

தளபதி கிட்டுவின் கைகளில் ஆயுதங்கள் மட்டுமன்றி எழுதுகோலும் திறமையாகவே கையாளப்பட்டது. தமிழ் மக்களை படுகொலை செய்தும், மக்கள் சொத்துக்களை சூறையாடியும், அழித்தும் வந்த சிங்கள இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடங்க வைத்து மக்களையும், அவர்களது உடமைகளையும் பாதுகாத்த வேளையில் எதிரிகளினதும், இனத்துரோகக் கும்பல்களினதும் அவதூறுகள், பழிகளை நீக்கி உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் 'களத்தில்' என்ற இயக்க செய்தி இதழைத் தொடங்கிய தளபதி கிட்டு அதிலும் தன் தனி ஈடுபாட்டை மேற்கொண்டான். பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து மக்களை அடிக்கடி நேரடியாகச் சந்தித்தான்.

தனது காலுக்குச் சிகிச்சை பெற தமிழ்நாடு சென்ற தளபதி கிட்டு தமிழ் மக்கள் மீது இலங்கை இந்திய ஒப்பந்தம் திணிக்கப்பட்டு இந்தியப்படை விடுதலைப்புலிகள் போர் தொடங்கியதையடுத்து இந்திய அரசினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டான். வீட்டுக்காவலில் இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், இந்திய அரசுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு தொடர்பாளனாகச் செயல்ப்படும் நிலை தளபதி கிட்டுவுக்கு ஏற்பட்டது.

தளபதி கிட்டு இந்திய அரசின் பிடியில் இருந்த வேளையிலும் இந்திய உளவுத்துறையினர், காவற்துறையினர் விடுதலைப்புலிகள் இயக்கத்தினதும் தமிழீழ மக்களினதும் நலன்களுக்கு எதிரான வகையில் திட்டங்கள் எண்ணங்கள் முன்வைக்கப்பட்ட வேளைகளில் அவற்றை கடுமையாக எதிர்த்தான். இந்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்திய தொலைக்காட்சிக்கு சமாதான முயற்சி தொடர்பாக பேட்டியளிக்கும்படி இந்திய உளவுத்துறையினர் தொலைக்காட்சி நிலைய செய்தியாளர்களை அழைத்து வந்தபோது, அமைதி முயற்சி பற்றி இயக்கம் கொண்டிருந்த நிலைக்கு மாறாகப் பேட்டி கொடுக்கமுடியாது என எதுவித தயக்கமுமின்றி அவர்களைத் திருப்பி அனுப்பினான் தளபதி கிட்டு.

தளபதி கிட்டு தமிழகத்திலிருந்த நாட்களில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை, அரசியல் தலைவர்களை, கலைஞர்களை, தமிழறிஞர்களை, பேராசிரியர்களை, பத்திரிகையாளர்களை எல்லாம் அடிக்கடி அழைத்துப்பேசி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்

---

**"எப்போதும் ஏழைகளுக்காகவும், மக்களுக்காகவும், உழைக்க வேண்டும் என்பதையே மனதில் வைத்திருக்க வேண்டும்."**

**- 15.05.1992**

*** 

**"ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் அர்த்தம் இருக்கிறது. ஆனால் எம்முடைய வாழ்க்கையின் அர்த்தத்தை நாம்தான் தேடிக் கொள்ள வேண்டும்."**

**- 09.06.1992**

*** 

**"சிந்தனையில் எளிமையாக வாழவும் மனித சேவையையும் எப்பொழுதும் முக்கியமாகக் கருத வேண்டும்."**

**- 10.10.1992**

**- கிட்டு -**

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவையையும், நியாயத்தையும் எடுத்துவிளக்கி அவர்களின் ஆதரவையும், உதவிகளையும் பெற்றான்.

தளபதி கிட்டு தமிழகத்தில் வீட்டுக்காவலில் இருந்தபோது காவல் கடமையில் இருக்கும், தன்னைச் சந்திக்க வரும் பொலிசாரிடம் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி எடுத்துரைக்கத் தவறுவதில்லை.

தளபதி கிட்டு தமிழகத்தில் இருந்த காலத்தில் 'தமிழீழம்' என்று இயக்கத்தின் மாத இதழ் ஒன்றைத் தொடங்கி அதற்கான பல ஆக்கங்களையும் தானே எழுதி, கைதாகி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்படும்வரை ஏழு இதழ்களை வெளியிட்டான். ஏழாவது இதழின் ஐயாயிரம் படிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

கைதாகி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட வேளையிற் கூட தளபதி கிட்டு உள்ளிருந்தபடியே வெளியே தலைமறைவாகியிருந்து செயற்பட்ட இயக்க வீரர்களுக்கு உரிய வேலைகளை வழங்கி அவர்களிடமிருந்து அறிக்கைகளையும் பெற்று ஆராயத் தவறவில்லை.

சிறையிலிருந்தபடியே அன்று இந்திய பிரதமராக இருந்த ராஜீவ்காந்திக்கு தளபதி கிட்டு கடிதம் எழுதினான். தளபதி கிட்டு சிறையில் இருந்த வேளையில்தான் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தேவி' வார இதழில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான தளபதி கிட்டுவின் நீண்ட கட்டுரைத் தொடர் வெளிவந்தது.

சிறையிலிருந்த வேளையில் தன்னை விடுவிக்குமாறும் அன்றேல் தமிழீழத்திலுள்ள விடுதலைப் புலிகளிடம் தன்னைச் சேர்ப்பிக்குமாறு கூறி சென்னை மத்திய சிறையிலேயே தளபதி கிட்டு காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டான். தமிழக மக்கள் கொதித்தெழுந்து விடுவார்கள் என்று அஞ்சிய இந்திய அரசு தளபதி கிட்டுவின் போராட்டத்திற்கு அடிபணிந்து, அவனை தமிழீழத்திற்கு கொண்டுவந்து விடுதலை செய்தது.

இந்திய விடுதலைப் புலிகள் போராட்டம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த வேளையில் தளபதி கிட்டு வன்னிக் காட்டிற்குச் சென்று தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து அங்கிருந்தபடி இயக்கப்பணிகளில் ஈடுபட்டான்.

1989ல் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடந்த வேளையில் பேச்சுவார்த்தைக்கென கொழும்பு சென்ற தளபதி கிட்டு அங்கிருந்து இங்கிலாந்து சென்று, அங்கிருந்து விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாளனாகச் செயற்பட்டான். வெளிநாட்டுப் பொறுப்பாளனாக இருந்து செயற்பட்ட மூன்று ஆண்டுகளில் தளபதி கிட்டு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. எடுத்துரைக்க இயலாதவை. வெளிநாட்டுப் பொறுப்பாளராக தளபதி கிட்டு பொறுப்பேற்றதும், அதுவரை மந்த நிலையிலிருந்த செயற்பாடுகள் துரிதமாகின. வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளைத் தீர்த்துவைத்தான்.

வெளிநாட்டிலிருந்த வேளையிலும், தமிழீழத்தில் இருந்து செயற்படுவது போல ஒவ்வொரு சிக்கலுக்கும், நெருக்கடிக்கும் எப்படி எப்படி நடந்தால் சிக்கல்களைத் தீர்க்கலாம், நெருக்கடிகளிலிருந்து விடுபடலாம் என்று தமிழீழத்தில் இயங்கிய தோழர்களிற்கு அறிவுறுத்துவதற்கு தளபதி கிட்டு தவறவில்லை.

தளபதி கிட்டு வெளிநாடுகளில் இருந்து செயற்பட்ட காலகட்டத்தில் கூட தமிழீ

**"உனது படிப்பையும் வேலையையும் ஒரு வேலைக்குரிய கடமையாகச் செய்யாமல் அதற்கு முழு அர்த்தம் கொடுக்கக் கூடிய மாதிரியாகச் செய்யவும்."**

**- 10.10.1992**

*** * ***

**"இன்னொருவரைப் பற்றி குறைவாக இன்னொருவருடன் பேசாதே. பிரச்சினைக்குரியவருடன் நேர்மையாகத் தெரிவிக்கலாம். ஆனால், உனது எண்ணங்களை எல்லாம் தெரிவிக்க வேண்டியதில்லை."**

**- 10.10.1992**

*** * ***

**"நேர்மையாகவும், உண்மையாகவும் வாழப் பழகவேண்டும். நேர்மையாகப் பேசுதல், நேர்மையாக நடத்தல் இவ்விடயங்களில் எப்பொழுதும் கவனமாய் இருக்கவேண்டும்."**

**- 10.10.1992**

**- கிட்டு -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூத்தை, இயக்கத்தை, இயக்கத் தலைவரை எவ்வாறு நேசித்தான், போராளிகளின் நலன்களில் எத்தனை அக்கறை கொண்டிருந்தான், தமிழீழப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, தமிழீழச் சிறார்களின் நலன்களைக் காக்க, தமிழீழ மக்களின் இடர்கள், இன்னல்களை களைய எத்தகைய ஆர்வத்தை, அவாவினைக் கொண்டிருந்தான் என்பதற்கு அவன் எழுதிய மடல்களே சான்றுகளாகத் திகழ்கின்றன.

தளபதி கிட்டுவினது அயராத உழைப்பும், அஞ்சாத தீரமும், உள்ளார்ந்த செயற்பாடும் எதிரிகளும் வியக்கின்ற வகையில், மதிக்கின்ற வகையில் அமைந்திருந்தன.

1987 ஆவணி இந்தியாவின் தலைநகர் டெல்லியிலிருந்து தலைவர் பிரபாகரன் அவர்களை சென்னைக்கு அழைத்து வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கறுப்புப் பூனைகள் பலர் சென்னையில் தளபதி கிட்டுவைக் காண்பதில் காட்டிய ஆர்வம், கிட்டுவின் செயற்பாடுகள் வெளியுலகம் அறியுமளவிற்கு வளர்ந்திருந்தது என்பதை உணர்த்தும் வகையில் இருந்தது.

மக்களோடு பழகுவதில் தளபதி கிட்டு கொண்டிருந்த அணுகுமுறை அவனை மக்கள் தலைவனாக ஆக்கியது. 19 வயது இளைஞனாக இயக்கத்தில் இணைந்த தளபதி கிட்டு சாதாரண வீரனாகக் களத்தில் இறங்கி நடத்திக் காட்டிய வீரச் செயல்களும், அவனது அஞ்சாத வீரமும்தான் அவனை மத்திய குழு உறுப்பினனாக, மாவட்டத் தளபதியாக, வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளனாக, கேர்ணலாக உயர்த்தி வைத்தது. போராட்டக் களத்தில் மட்டுமன்றி, அரசியல் அரங்கிலும், பொருளாதார முனையிலும், சமூகப் பணியிலும், இயக்க நலன் காப்பதிலும், மக்கள் ஆதரவையும், அன்பையும் பெறுவதிலும் எமது மூத்த தளபதி கேர்ணல் கிட்டு கொண்ட ஈடுபாடும் பெற்ற வெற்றிகளும் மக்கள் நினைவிலிருந்து என்றுமே அகலாது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், அதிக பக்கங்கள் கேர்ணல் கிட்டுவினதாகவே இருக்குமென்பது திண்ணம். □

**வெ. இளங்குமரன்**

# கட்டுமரத் தயாரிப்பிற்கு இலவமரம் பயன்பாடு

எமது பிரதேசத்தில் கட்டுமர மீன்பிடித் தொழில் ஒரு பாரம்பரிய முறையாகும். இக்கட்டுமரத் தயாரிப்புக்கு, காலம் காலமாக தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட அல்வீசியா எனப்படும் ஒருவகை மரமே பயன்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இவ் அல்வீசிய மரம் கொண்டுவரப்பட முடியாத காரணத்தால் புதிதாக இலவமரம் கட்டுமரத் தயாரிப்புக்கு பரீட்சார்த்தமாக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் இலவமரமானது தமிழீழப் பகுதிகளில் குறிப்பாக வன்னிப் பகுதியில் கூடுதலாகக் கிடைக்கக் கூடியதாகும். இம்மரத்தின் விசேட தன்மைகள் கட்டுமரத் தயாரிப்புக்கு அல்வீசியாவிலும் பார்க்கச் சிறந்ததாகச் செயற்படுகின்றது. குறிப்பாக இலவமரம் நீரில் நன்கு மிதக்கக் கூடியது. இம்மரத்தால் செய்யப்பட்ட கட்டுமரம் வெட்டியவுடன் ஈரமான நிலையிற்கூட சுமார் 500 கி.கிராம் நிறையைத் தாங்கக் கூடியதாகவும் உள்ளது.

மேலும் சில வாரங்கள் செல்ல காய்ந்தபின் 4 மரத்துண்டுகளால் பிணைக்கப்பட்ட 10 முழு நீளமான கட்டுமரத்தில் 1500 - 1800 கி. கிராம் வரையிலான நிறையைக் ஏற்றக் கூடியதாக உள்ளது.

அல்வீசியாவிலும் பார்க்கக் கூடுதலான காலம் நீரில் பாவிக்கக் கூடியதாக இலவ மரத்தின் தன்மை உள்ளது. இது மட்டுமன்றி நீரை உறிஞ்சும் தன்மையும் மிகக் குறைவாக உள்ளது. இவ்வாறான சிறப்பியல்புகளால் இம்மரம் கட்டுமரத் தயாரிப்புக்குச் சிறந்ததாக தற்பொழுது கருதப்படுகின்றது.

**- பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்






# அக்கரைப்பூக்கள்

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு!

விடுதலை பற்றிய கனமான விடயங்களை எல்லாம் மிக இலகுவாக விளங்கும் வகையில் வெளியிடும் உங்கள் பணி என்றென்றும் தொடர வாழ்த்துகிறேன்.

விழுதுகள் பகுதியும், பசீர் காக்காவின் நினைவுகள் பகுதியும் எந்தவொரு இதயத்துள்ளும் துளைத்துச் சென்று அழியாமல் படிந்து விடக் கூடியவை.

**முத்து**
**டென்மார்க்.**

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

அன்புடையீர், எரிமலை ஏட்டின் வாசகர்களில் நானும் ஒருவன். அந்நிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வையும், விடுதலையின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் பத்திரிகைகளில் ஒன்றாகத் திகழும் எரிமலை மென்மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

**நவமகள், வேலணையூர்.**

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

எரிமலை இதழை தொடர்ந்து வாசித்துவரும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். 1993 ஆம் ஆண்டு மாசி மாதம் வெளிவந்த எரிமலை பல சிறப்பம்சங்களுடன் வெளிவந்திருந்தாலும், தளபதி கிட்டுவின் வீரமரணத்தையொட்டி வந்த கவிதைகளும், கட்டுரைகளும், கரும்பறவை அவர்கள் எழுதிய இன்றைய நிகழ்வில் அன்றைய நினைவுகள் என்ற மாவீரர் நாள் கட்டுரையும் என் மனதில் ஓர் கவலையை ஏற்படுத்தியது. இனிவரும் எரிமலை இதழ் எப்போது என் கைக்கு கிடைக்குமென ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். எரிமலை இதழை தொடர்ந்து தமிழீழத்தின் பல சிறப்பம்சங்களுடன் வெளியிட்டுவரும் எனது அன்பார்ந்த ஆசிரியர் குழுவினருக்கு மனமுவந்த நன்றி.

**சற்குணநாதன், கனடா.**

எரிமலை ஆசிரியருக்கு!

நான் எரிமலை இதழை கடந்த ஐந்து மாதங்களாகத்தான் படித்து வருகின்றேன். ஆனாலும் அவற்றில் வந்த ஆக்கங்கள் மனதைக் கவரவே அதற்கு முந்திய பல இதழ்களை எடுத்துப் படித்தேன். நான் தமிழீழத்தில் இருந்தபோது அறிந்திராத பல தகவல்களை எரிமலை மூலமாக அறிய முடிந்தது. எத்தனையோ உள்ளங்களில் கொந்தளித்து சுடர் விட்டெரியும் விடுதலை உணர்வுகளை அள்ளிக் கொட்டும் ஓர் அற்புத ஊற்றாக எரிமலை விளங்குகிறது. எத்தனையோ மைல்களுக்கப்பால் நாம் இருந்தாலும் எம்மையும் எம் தமிழ் தாயகத்தையும் இணைக்குமோர் அறிவுப் பாலமாக எரிமலை விளங்குகிறது. இன்னும் வெளிக்கொண்டு வரப்படாத எத்தனையோ நிகழ்வுகளை வெளியிட வேண்டும். எரிமலை தொடர்ந்தும் தனது அரிய சேவையினை வெற்றிகரமாக ஆற்றவேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன்.

**செல்வி. துஷ்யந்தி ஜெயராசா**

அன்புள்ள எரிமலை ஆசிரியர் குழுவுக்கு!

எரிமலை சிறந்த பத்திரிகையாக வருவது பாராட்டத்தக்கது. அதே வேளை எரிமலையில் இடம்பெறும் ஆய்வுக் கட்டுரைகள் பிற்காலத்தில் ஆதாரங்களாகும் தகுதியை பெறுகின்றன. இந்த மேலதிக பொறுப்பு எரிமலைக்கு உண்டு.

1993 மாசி இதழில் இடம் பெற்றிருந்த இ.முருகையனின் "ஈழத் தமிழர் எழுச்சியில் கவிதைக் கலையின் பங்களிப்பு" என்ற கட்டுரை சம்பந்தமாக எனக்கு வந்துள்ள மூன்று கடிதங்களின் சாரம்சத்தைக் கீழே தருகிறேன்.

1. அறுபதுகளுக்கு முன்னரே 'உயிர் தமிழுக்கு' என்ற தனது நூலில் காசிஆனந்தன் "வெறிகொள் தமிழர் புலிப்படை" போன்ற வரிகளை பயன்படுத்தியும் கூட அவருடைய கவிதைகள் 1968 க்குப் பிற்பட்டவை தான் என்பது போன்ற பிரமையை கட்டுரையாளர் உண்டுபண்ணியுள்ளார். ஈழத்தமிழர் எழுச்சியில் காசி ஆனந்தனின் பங்களிப்பு கட்டுரையாளரால் மறைக்கப் பட்டுள்ளது.

2. கட்டுரையாளரால் மனந்திறந்து பாராட்டப்பட்ட

* அடைக்கலம் தந்த வீடுகளே...
* எம் தோழர்களின் கல்லறையில்...
* கோட்டை கோட்டையாய் இனி விழும்...

ஆகிய அனைத்துப் பாடல்களுமே காசிஆனந்தனால் எழுதப்பட்ட பாடல்களாக இருந்தும் அந்தப் பாடல்களை எழுதியவர்கள் பெயரிலிகள் என கட்டுரையாளர் திட்டமிட்டு மறைத்திருக்கிறார்.

எனக்கு வந்த மூன்று கடிதங்களும் எனக்கு எழுதப்பட்ட காரணத்தை அறிவேன்.

கொச்சைகள் நிறைந்த குறுகிய கண்ணோட்டமுடைய அந்தக் கடிதங்களின் ஏனைய அனாவசிய விடயங்களை விட்டுவிடுவோம். தவறான தகவல்களை ஆய்வுக் கட்டுரைகளில் இடம்பெற அனுமதிப்பது எரிமலையின் தரத்தைப் பாதிக்கும் என்பதாலும், எனக்கு வந்த கடிதங்களின் நோக்கமும் கொச்சை அர்த்தங்களும் மற்றைய பலவீனமான தமிழரை திசைதிருப்பும் என்பதாலும் இதனை உடனடியாக உங்களுக்கு அறியத் தருகிறேன்.

**கா. சிவநாதன்**
**கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்**
**ஜேர்மனி.**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக அரசியல்

# ஒரு மேலோட்டம்

வளவன்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கையில், உலக அரசியல் போக்குகளையும், அதன் நுணுக்கங்களையும், சடுதியான திடீர் மாற்றங்களையும் கணக்கில் எடுக்காது விடலாகாது. சர்வதேச சமூகத்தில் தமிழ் இனமும் அங்கத்துவம் என்பதோடு மாத்திரமல்ல, சர்வதேச உறவுகளை வரையறை செய்யும் சர்வதேச சட்டங்களும், சம்பிரதாயங்களும், நடைமுறைகளும் தமிழீழ மக்களையும் கட்டுப்படுத்தியுள்ளன. சர்வதேச சமூகத்தின் கண்கண்ட நேரடிப் பிரதிநிதியாக வெளிப்படும் ஐக்கிய நாடுகள் சபை உலக நாடுகளை உள்ளடக்கியதாகவும், உலக விவகாரங்களைக் கையாள்வதாகவும் விளங்குகின்றது. இரண்டு உலகமாக இருந்த நிலைமாறி, ஒருலகக் கொள்கை வலுப்பெற்று வருவதும், வேகத் தொலைத் தொடர்பு, விஞ்ஞான முன்னேற்றம், துரித செய்திச் சேவை, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை காரணமாக உலகம் சுருங்கி வருவதும், உலக நடப்பினை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய அவசியத் தேவையினை ஏற்படுத்தியுள்ளன. இவற்றை நாம் கவனிக்காது எமது போராட்டத்தை முன்னெடுப்போமாகில் எம்மை அனாதரவாக கைவிட்டுவிட்டு உலகம் எங்கோ வேகமாக சென்றுவிடும் என்பதையும் உணர்ந்திருக்கிறோம்.

பனிப்போர் முடிந்துவிட்டது. அதன் சலசலப்புகள் இன்னும் ஓயவில்லை. ஆயினும் மீண்டும் அத்தகு பனிப்போர் நிலை விரைவில் உருவாகும் என எவரும் எண்ணவில்லை. ரஷ்ய பராளுமன்றத்தில் ஜனாதிபதி ஜெல்சினை அரசியல் சட்டரீதியாக விலக்க வேண்டும் என்ற முயற்சியும், கொம்யூனிசத்துக்கு ஆதரவான சுலோகங்களும் ரஷ்ய மக்களுக்கிடையில் குடியொப்பம் ஒன்றினை வைத்து சகல வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக மாறும் ஜெல்சினின் நடவடிக்கைகளும் பழைய சோவியத் யூனியனை அங்கு தோற்றுவிக்கும் என்று கூறமுடியாது. ஆயினும், சோவியத் யூனியன் இருந்த இடத்தில் இன்னொரு புதிய வல்லரசொன்று ருஷ்யா என்ற பெயரில் உருவாகுவதை தடுப்பதில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

சமதர்ம சமூகம் என்பதும், சமதர்ம அரசு என்பதும், சமதர்மப் புரட்சி என்பதும் கூட முன்னிருந்தவை போல் அரச சர்வாதிகாரத்தை முன்னிறுத்தப் போவதில்லை. பரந்துபட்ட மக்கள் என்ற அத்திவாரத்தில் சமதர்ம யுகம் ஒன்று கட்டியெழுப்பப்படுதல் சாத்தியமாயினும் இயங்கியல் வரலாற்றுப் போக்கினூடேயே அதுவும் சாத்தியமாகும். இந்த நியதியின் படி பார்த்தால் பல்வேறு வல்லாதிக்க முகாம்கள் உருவாகுவதே தற்போதைய நடைமுறையாகும்.

பனிப்போரின் முடிவை நிர்ணயித்த புஷ் நிர்வாகம், வளைகுடா யுத்தகாலத்தின் போது புதிய உலக ஒழுங்கு என்ற ஒருலகக் கொள்கையை முன்வைத்ததாயினும், பொருளாதார ரீதியில் இன்னும் பலம்மிக்க வல்லரசுகள் உருவாகுவதை அதனால் தடுக்க முடியவில்லை.

யப்பான், ஐரோப்பா, ரஷ்யா என்ற ரீதியில் அவை அடையாளங் காணப்பட்டுள்ளதாயினும், மேலும், பல பிராந்திய வல்லரசுகள் உருவாகும் சாத்தியமும் உண்டு. யப்பான், இராணுவ, அணுஆயுத வல்லரசாக எதிர்காலத்தில் மாறும் நிலை காணப்படுகின்றது. பொருளாதார ஜாம்பவனாக உள்ள ஜப்பான், தனது இராணுவத்தை வளர்த்து வருவதோடு, முதன்முறையாக, வெளிநாடு ஒன்றுக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(கம்போடியா) தனது படைகளை அனுப்பியுள்ளது. பிரான்சிடமிருந்தும் அது அணு உலைகளுக்கான மூலப்பொருள்களை வாங்கி வருகின்றது. ஐரோப்பாவின் பொருளாதார, அரசியல், இராணுவ ஒன்றிணைவும், GATT என்ற பொருளாதார பேச்சுவார்த்தையில், அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவிற்கும் இடையில் தோன்றிய பிணக்குகளும் முக்கிய முரண்களாக காணப்படுகின்றன.

இவ்வுலகச் சதுரங்க விளையாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் இடம்பெறுகின்றன. உலக அரசியல் நாம் அறியாமல் எம்மை நோக்கி வருவதையும் அவதானிக்கலாம். ருஷ்ய ஜனாதிபதி ஜெல்சின் பாதுகாப்புப் பொறுப்பாளர் அண்மையில் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியைக் குறிப்பிடலாம். ஜெல்சின் இந்தியா சென்ற போது, ஜெல்சினைக் கொல்ல ஈழப் பிரிவினை வாதிகள் முயற்சிகள் செய்தார்கள் என்பதே அதுவாகும். இது நிச்சயமாக சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளை அவமானப்படுத்தும் முயற்சியாயினும், இது தேவையற்ற சீண்டல் என்பதும் உண்மையாகும். சீனாவின் வளர்ச்சி இன்னொரு முக்கிய அம்சமாகும். சீனாவின் பரந்த சந்தைகண்களை உறுத்தும் விடயமாகும். சீனாவின் சந்தையை கட்டுப்பாடற்ற விதமாக அகலத்திறக்க பலவித முயற்சிகள் இடம்பெறுகின்றன. சீனாவிற்கு எதிராக ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதக் கூட்டத் தொடரின்போது, சீனாவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, மேற்குலக நாடுகளினால் கொண்டு வரப்பட்டிருந்த தீர்மானமானது மூன்றாம் உலக நாடுகளினன் கூட்டுச் செயற்பாட்டால் தோற்கடிக்கப்பட்டமை முக்கிய நிகழ்ச்சியாகக் கூறப்படுகின்றது. மனித உரிமை மீறல் விடயம் அரசியல் ஆயுதமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

சர்வதேச அரங்கில் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்த நாடாக எமது பிரச்சினையைப் பொறுத்து விளங்குவது இந்தியா. இந்தியா வல்லரசாக கனவு காணும் நாடு. உலக வங்கி, உலக நாணய நிதியம் ஆகியவற்றிடம் இந்தியா கடன் பட்டுள்ளது. பொருளாதார வர்த்தக கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, இந்தியா வெளிநாட்டு மூலதனத்துக்கு வழிவகுத்துள்ளது. எனவே இந்தியச் சந்தைகளை நோக்கி மேற்குலக நாடுகள் கவரப்படுவது அதிசயமல்ல. இவ்வடிப்படையில் அண்மையில் பிரிட்டனின் ஜோன் மேஜர், ஜெர்மனியின் கெல்மட் கோல், ருஷ்ய ஜெல்சின் ஆகியோர் இந்தியா சென்றது குறிப்பிடத்தக்கது. புஷ் யப்பானுக்கு பெரும் முதலாளிகளை அழைத்துச் சென்றது போல், ஜோன் மேஜர் தன்னுடன் பெரும் முதலீட்டாளர்களைக் கொண்டு சென்றதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு தோன்றும் புதிய நிலைமை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது எத்தகு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய மாற்றங்களை சிறிலங்காவும் உணர்ந்தே உள்ளது. எனவேதான் சிறிலங்

## தமிழ் நீர் வளத்துக்கும் சிங்களத்தால் ஆபத்து.

சீமெந்து உற்பத்திக்கென காங்கேசன்துறை சீமெந்து ஆலையின் சுற்றாடல் பகுதியிலிருந்து ஏறத்தாழ 25 அடி ஆழம் வரை சுண்ணாம்புக்கல் வெட்டி எடுப்பது யாவரும் அறிந்ததே. கடற்கரை ஓரமாக உள்ள இப்பகுதியிலிருந்து இங்ஙனம் சுண்ணாம்புக்கல் எடுக்கப்படுவதனால் நிலத்திலுள்ள பாறை வெடிப்புகளினூடாக கடலை நோக்கி நன்னீர் ஊற்றுக்கள் பெருமளவில் வெளியேறும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. வெடிவைத்துத் தகர்க்கப்படும் நில அதிர்வுகளினால் பாறை வெடிப்புகள் மேலும் விரிவடைந்து நன்னீர் ஊற்றானது கடலை நோக்கி அதிகமாகப் பாய்ந்து ஓடக்கூடிய நிலைமை ஏற்படும். இதனால் யாழ். குடாநாட்டிலுள்ள நிலநீர் வெகு விரைவில் குறைந்து போகும் அபாயம் உள்ளது. இங்குள்ள சுண்ணாம்புக் கல்லினால் சிங்களப் பகுதியிலுள்ள காலியில் சீமெந்து உற்பத்தியும், சிங்களவருக்கு வீடும் கிட்டுகின்றது. எம்மண்ணிலுள்ளவருக்கு நீர் அருகி நிலவளம் குறுகிப்போகும் நிலை வந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காவும் தனது வர்த்தகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி ஐரோப்பிய சமூக நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முயன்றுவருகின்றது. இதன்மூலம், சிறிலங்காவில் கூடுதலான மேற்குலக முதலீட்டை எதிர்பார்க்கின்றது. இவ் ஒப்பந்தத்தில் சிறிலங்காவின் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு இடம்பெறுவதை, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சரத்துக்களைத் திணித்து, சிறிலங்கா அரசு சமன்படுத்த முனைகிறது.

இந்தியாவின் தாராள பொருளாதார கொள்கையை சீர்குலைக்க பம்பாய் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது. மதக் கலவரங்களின் எதிரொலியாகவும் இது இருக்கலாம். இந்தியாவின் வல்லரசுக் கனவைச் சிதைக்கும் பரந்துபட்ட வெளிநாட்டுச் சதியாகவும் இருக்கலாம். எவ்வாறாய் இருந்தபோதிலும் மேற்குல நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையில் உறுதிப்படும் உறவுகள் வளர்ந்து கொண்டு போகும் அறிகுறியே காணப்படுகின்றது. இவ்வுறவுகள் தமிழ்த் தேசிய விடுதலையை ஏன் பாதிப்படையச் செய்ய வேண்டும் என்ற கேள்வி எழும்புகின்றது. எதிர்நோக்கில் இதனைப் பார்த்து, இந்தியா தேசிய விடுதலைக்களுக்கு எதிரானது; எமது போராட்டம் சிறிலங்கா அரசுக்கு எதிரானது. எனவே இந்தியா, சிறிலங்கா ஆகிய நாடுகளுடன் நல்லுறவை வளர்க்க எமது போராட்டத்திற்கு, பயங்கரவாத முத்திரை குத்தி அழித்துவிடலாம் என மேற்குலகம் எண்ணலாம்.

இத்தகு யதார்த்தத்துக்கு எதிரான, வரலாற்றின் போக்குக்கு எதிரான கருதுகோள்களை விடுத்து, நடைமுறைச் சாத்தியமான, ஜனநாயக ரீதியான, உண்மையான நிரந்தரவழி எதுவென்று ஆராயவேண்டும்.

தேசிய இனங்களின் அபிலாசைகளை, அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலே சரி என்பது புலனாகும். இவ் அடிப்படையிலான தீர்வு குறித்து மேற்குலகமும், இந்தியாவும் இணக்கப்பாடொன்றைக் காணலாம். அவ் இணக்கத்தின் அடிப்படையில், போராடும் பிரிவினராகிய சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஒழுங்கை செய்து கொடுக்கலாம். மேற்குலகமும் இந்தியாவும் இணைந்து மத்தியஸ்தம் வகிப்பதான, சர்வதேச சமூகத்தின் அனுசரணை உடனான பேச்சுவார்த்தை நிச்சயம் சமாதானத்தைக் கொண்டுவரும். தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை அது கொண்டுவரும். முரண்படும் உலகம் நீங்கி சுபீட்சமான புதிய உலகம் உருவாகும்.

## மானமுள்ளவன் சரணாகதியடையான்



**நா**ம் பல வீரர்களைப் போரில் இதுவரை இழந்துவிட்டோம். இத்தனை இழப்புகளுக்குப் பின்னரும் சுதந்திரத் தமிழீழம் என்ற எமது உயிருக்குயிரான நோக்கத்திலிருந்து நாம் அணுவளவேனும் விட்டுக் கொடுத்ததில்லை. விட்டுக் கொடுக்கப் போவதுமில்லை. எமக்குத் தமிழ் மக்கள் தமிழீழத்தை மீட்கப் போரிடுமாறு ஆணை வழங்கியுள்ளனர்.

எமது தலைவர் பிரபாகரன் முதல் இயக்கத்தின் கடைசிப் போராளிவரை எமது வாழ்வு நிரந்தரமென்று எண்ணிக் கொண்டு போர்க்களத்தில் குதிக்கவில்லை. எமது வாழ்வு நிச்சயமற்றது. எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த பத்து ஆண்டு கால வரலாற்றைப் படைத்தது. நாம் தமிழீழ நாட்டை மீட்பதற்கு ஆயுதமேந்தியுள்ளோம். மானமுள்ள மக்கள் மாற்றானிடம் ஒருபோதும் சரணாகதியடைய மாட்டார்கள்.

- கிட்டு -

(ஈழமுரசு 27-1-87)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**சிலியின் நோபல் பரிசு பெற்ற கவி ஞர் கபிரியல் மின்றல் என்பவரின் சொற்களில்:**

நாம் பல தப்புகளையும், தவறுகளையும் செய்திருக்கிறோம்.
அவற்றுள் மிக மோசமான குற்றம்
எமது குழந்தைகளை அநாதரவாக விட்டதுதான்.

அதனால் வாழ்க்கையின் முளையையே புறக்கணித்துவிட்டோம்.
எங்கள் தேவைகள் பலவற்றைத் தள்ளிப் போடலாம்.
குழந்தைகளின் தேவைகளைத் தள்ளிப் போடமுடியாது.
இப்பொழுதுதான்
அவன் எலும்புகள் உருவாகுகின்றன
அவன் குருதி உற்பத்தியாகத் தொடங்குகின்றது.
அவன் உணர்வுகள் வளர்கின்றன.
அவனுக்கு நாங்கள் நாளை என்று சொல்ல முடியாது.
ஏனெனில்,
அவன் பெயர் : இன்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்